janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 ஏப்ரல் 23 - ஏப்ரல் 29 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 03




# 137வது மேதின சூளுரை

## ஏஐடியுசி - சிஐடியு கூட்டறிக்கை

**தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், சிஐடியு தமிழ் மாநிலக்குழு பொதுச் செயலாளர் ஜி.சுகுமாரன் ஆகியோர் விடுக்கும் கூட்டறிக்கை வருமாறு:**

1886ல் சிகாகோவில் நடைபெற்ற 8 மணிநேர வேலைக்கான போராட்டம், துப்பாக்கிச் சூடு, மரண தண்டனை ஆகியவற்றின் நினைவாக, மே தினம் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. 1889ல் பிரடரிக் எங்கல்ஸ் தலைமையில் நடந்த இரண்டாம் அகிலம் இதை உலகத்தொழிலாளர் உரிமை நாளாகப் பிரகடனம் செய்தது.

இந்தியாவில் முதல் முதலாக தமிழகத்தில், சென்னை கடற்கரையில் சிந்தனைச்சிற்பி சிங்காரவேலர் 1923 ஆம் ஆண்டு மே முதல் நாள் செங்கொடியேற்றி மே தினத்தைக் கொண்டாடினார். அது நிகழ்ந்து நூற்றாண்டு நிறைகிறது. பெருமைக்குரிய அந்த நிகழ்வை நினைவிலேந்தி தமிழ்நாட்டில் உழைக்கும் மக்கள் அனைவரும் மே தினத்தை, செங்கொடிகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டாடுவோம்.

வரலாறு காணாத உலக முதலாளித்துவ நெருக்கடியினால் வேலையிழப்பு, கதவடைப்பு, லேஆப், ஊதிய வெட்டு அதிகரித்து வருகிறது. நெருக்கடி சுமைகள் முழுவதும் சாதாரண உழைப்பாளி மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. விரல் விட்டு எண்ணக்கூடிய சில முதலாளிகளுக்கு மீட்பு திட்டங்கள் என்ற பெயரால் பெருமளவு சலுகைகள், தொழிலாளிகளுக்கோ துன்பதுயரங்கள்.

இக் கொடுமைகளுக்கு எதிராக உலக நாடுகள் பலவற்றிலும் அலை அலையான வேலைநிறுத்தப்போராட்டங்கள் நடந்தவண்ணம் உள்ளன. போராடும் உழைப்பாளிகளுக்கு மே தின நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

### போராடும் உரிமைகள் மீது தாக்குதல்

இந்தியாவில் ஆர்எஸ்எஸ்– பாஜக அரசாங்கத்தின் கார்ப்பரேட் ஆதரவு நடவடிக்கைகள், கடந்த காலங்களை விட பெருமளவு அதிகரித்துள்ளது. தொழிலாளர் சட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் தொழிலாளர்கள் மீது கடுமையான தாக்குதலை தொடுக்கிறது. இந்த சட்டங்களை எதிர்த்து தொழிலாளர்கள் கடுமையான போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டங்களின் விளைவாக ஒன்றிய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் விதிகளை உருவாக்கும் முயற்சிகள் தடுக்கப்பட்டு வருகின்றன. சமூக பாதுகாப்பு, ஓய்வூதியம், பணி பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு போன்றவை பறிக்கப்படுகின்றன. இதனை எதிர்த்து போராடும் உரிமைகளும் கூட தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

கோடிக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து வரும் சிறு, குறு,நடுத்தர தொழில்கள் நெருக்கடியில் இருந்து மீண்டு பழைய உற்பத்தி நிலைக்குச் செல்ல முடியவில்லை. ஒன்றிய அரசு இந்த தொழில்களை செயலூக்கப்படுத்த எடுத்த நடவடிக்கைகள் உருப்படியான பலன் எதையும் தரவில்லை.

பெருகிவரும் மோசமான வேலையின்மை கவலை அளிக்கிறது. ஒவ்வொரு நாளும் வேலை இழப்பும், ஆலை மூடலும், தொழிற்சாலைகளில் மட்டுமின்றி ஐ.டி. துறையிலும் பெருகி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் வேலை வாய்ப்பு சந்தையில் 80 லட்சம் இளைஞர்கள் சேருகிறார்கள். வேலையின்மை 34% என அதன் உச்சத்தை தொட்டுவிட்டது.

கிராமப்புற பொருளாதாரத்தை ஓரளவுக்கு பாதுகாத்து வந்த தேசிய கிராமப்புற வேலை உறுதி அளிப்பு திட்ட தொழிலாளர்களுக்கான நிதி 30% அளவுக்கு வெகுவாக குறைக்கப்பட்டதால் அவர்களது வேலை பெறும் உரிமையும் பறிக்கப்படுகின்றன.

### சொத்துக்குவிப்பும் அரசின் கொடுமைகளும்

2018 ஆம் ஆண்டில் 19 கோடியாக இருந்த வறுமையில் வாடுவோர் எண்ணிக்கை, 2022ல் 35 கோடியாக அதிகரித்துள்ளது. பசியின் கொடுமையால் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மரண விகிதம் 65% ஆக பெருகி உள்ளது என ஒன்றிய அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தெரிவிக்கிறது.

அதே சமயம் நாட்டின் முதல் 10 பணக்காரர்களின் சொத்து 27.5 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதிலும் முதல் 5 பேரிடம் 72% சொத்துக்கள் குவிந்துள்ளன.

அத்தியாவசியமற்ற இறக்குமதிகள் அதிகரிப்பு, நிலக்கரி, தொழில்துறை உதிரி பாகங்கள், இயந்திரங்கள் மற்றும் மின்னணு பொருள்கள் ஆகியவற்றில் கட்டாய இறக்குமதி போன்றவற்றால் பாஜக ஆட்சியில் ஏற்பட்டுள்ள வர்த்தக பற்றாக்குறை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் உள்ளடக்கம் அபரிமிதமாக அதிகரித்து; ஏற்றுமதியில் நாட்டிற்கு வர வேண்டிய பலனை முழுவதுமாக பறித்து விட்டது.



தொடர்ச்சி 8ம் பக்கம்

## 2023 மே தின விழாவில் பங்கேற்கும் தலைவர்கள்

| எண் | மாவட்டம் | ஏஐடியூசி | சிஐடியு |
|---|---|---|---|
| 1 | வடசென்னை | சி.எச்.வெங்கடாசலம் | ஜி.ராமகிருஷ்ணன் |
| 2 | மத்திய சென்னை | சி.ஸ்ரீகுமார் | ஏ.கே.பத்மநாபன் |
| 3 | தென்சென்னை | அ.பாஸ்கர் | டி.கே.ரங்கராஜன் |
| 4 | காஞ்சிபுரம் | வி.ஆதிமூலம் | அ.சவுந்தரராசன் |
| 5 | செங்கல்பட்டு | டாக்டர் ஆர்.சாந்தி | பி.சம்பத் |
| 6 | திருவள்ளூர் | கே.இரவி | பி.சண்முகம் |
| 7 | வேலூர் | டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் | |
| 8 | திருப்பத்தூர் | எம்.இலகுமையா | |
| 9 | திருவண்ணாமலை | பி.எஸ்.மாசிலாமணி | இ.பொன்முடி |
| 10 | விழுப்புரம் | வகிதா நிஜாம் | எஸ்.கே.மகேந்திரன் |
| 11 | கள்ளக்குறிச்சி | ஜி.மஞ்சுளா | கே.விஜயன் |
| 12 | கடலூர் | ஆர்.ஆறுமுகம் | வி.குமார் |
| 13 | நாகை | எம்.செல்வராசு எம்.பி. | ஆர்.தெய்வராஜ் |
| 14 | மயிலாடுதுறை | மு.அ.பாரதி | நாகை மாலி எம்எல்ஏ |
| 15 | திருவாரூர் | க. மாரிமுத்து எம்.எல்.ஏ. | பி.கருப்பையன் |
| 16 | தஞ்சாவூர் வடக்கு | ஆர்.தில்லைவனம் | |
| 17 | தஞ்சாவூர் தெற்கு | வை.செல்வராஜ் | டி.ரவீந்திரன் |
| 18 | புதுக்கோட்டை | கோ.பழனிச்சாமி | ஜி.சுகுமாறன் |
| 19 | அரியலூர் | சி.சந்திரகுமார் | சாமி நடராஜன் |
| 20 | பெரம்பலூர் | திருச்சி எம்.செல்வராஜ் | ஆ.கிருஷ்ணமூர்த்தி |
| 21 | திருச்சி மாநகர் | டி.எம்.மூர்த்தி | கே.ஆறுமுகநயினார் |
| 22 | திருச்சி புறநகர் | பி.பத்மாவதி | எம்.சின்னதுரை எம்எல்ஏ. |
| 23 | சிவகங்கை | சி.மகேந்திரன் | கே.சாமுவேல்ராஜ் |
| 24 | ராமநாதபுரம் | டி.ராமசாமி | டி.டெய்சி |
| 25 | தூத்துக்குடி | டி.இசக்கி துரை | எம்.மகாலட்சுமி |
| 26 | கன்னியாகுமரி | தா.சுபாஷ் சந்திர போஸ் | எஸ்,ராஜேந்திரன் |
| 27 | தென்காசி | தினேஷ் சீரங்கராஜ் | மாலதிசிட்டிபாபு |
| 28 | திருநெல்வேலி | என்.செல்வராஜ் | கே.திருச்செல்வன் |
| 29 | விருதுநகர் | இரா.முத்தரசன் | ஆர்.கருமலையான் |
| 30 | மதுரை மாநகர் | கே,சுப்பராயன் எம்.பி. | சு.வெங்கடேசன் எம்.பி. |
| 31 | மதுரை புறநகர் | எம்.கண்ணகி | எம்.தனலட்சுமி |
| 32 | தேனி | எம்.ரவி | கே.ஆர்.கணேசன் |
| 33 | திண்டுக்கல் | ம.இராதாகிருஷ்ணன் | ஆர்.சிங்காரவேலு |
| 34 | கரூர் | க.பாரதி | வி.அமிர்தலிங்கம் |
| 35 | நாமக்கல் | எஸ்.சின்னச்சாமி | சி.நாகராஜ் |
| 36 | சேலம் | எஸ்.காசி விஸ்வநாதன் | கே.பாலபாரதி |
| 37 | ஈரோடு தெற்கு | ஸ்டாலின் குணசேகரன் | எம்.சந்திரன் |
| 38 | ஈரோடு வடக்கு | கே.நடராஜன் | |
| 39 | திருப்பூர் | என்.பெரியசாமி | எஸ்.கண்ணன் |
| 40 | கோவை | எம்.ஆறுமுகம் | பி.ஆர்.நடராஜன் எம்.பி |
| 41 | நீலகிரி | எம்.போஜராஜ் | ஏ.ராதிகா |
| 42 | தருமபுரி | மு.வீரபாண்டியன் | கே.சி.கோபிகுமார் |
| 43 | கிருஷ்ணகிரி | டி,ராமச்சந்திரன் எம்எல்ஏ | எஸ்.வாலண்டினா |
| 44 | புதுச்சேரி | ஏ,எம்,சலீம் | |
| 45 | ராணிபேட்டை | | பி.டில்லிபாபு |

கட்சிக் கடிதம்

# நம்மை அங்கீகரிப்பது யார்?









போர்க்குணமிக்க தோழர்களே!

**சென்ற வாரத்தில் பல பரபரப்பான செய்திகள் வெளிவந்தன. அவற்றில் ஒன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கான தேசிய அங்கீகாரம் ரத்து என்கிற செய்தியும் ஒன்று!**

தொலைக்காட்சிகளிலும், நாளேடுகளிலும், சமூக ஊடகங்களிலும் மிகவும் பரபரப்பாக வெளிவந்தன.

இதனைக் கண்டு மகிழ்ந்தோர் உண்டு, இனிப்பு நிறைந்த பாயாசம் சாப்பிட்டவர்கள் உண்டு, சுவை மிக்க அல்வாவை தான் ருசித்தது மட்டுமின்றி, மற்றவர்களுக்கும் வழங்கி மகிழ்ந்தது உண்டு.

கதை முடிந்தது, விழுந்தது விழுந்ததுதான், இனி எழவே முடியாது என்று கூறுபவர்கள் உண்டு.

சனியன் தொலைந்தது என்று சந்தோஷப்பட்டவர்கள் உண்டு.

இவ்வாறு கருதுபவர்கள், எண்ணியவர்கள், மற்றவர்களுக்கு கூறியவர்கள் யார்?

இவர்களின் முகவரியைத் தேடிப் பாருங்கள் உண்மை தெரியும்.

கம்யூனிஸ்ட் பேரியக்கத்தின் வளர்ச்சியை பொறுக்காதவர்கள், பொறுத்துக் கொள்ள இயலாதவர்கள் தொடர்ந்து எடுத்து வரும் வாந்தியைத் தான் தற்போதும் எடுத்துள்ளார்கள்.

தேசிய அங்கீகாரம் குறித்த சர்ச்சை குறித்து சென்ற வார ஜனசக்தியில் தேசிய செயற்குழுவின் அறிக்கை, மேலும் நமது மதிப்புமிக்க தலைவர் தோழர் சுதாகர் ரெட்டி அவர்களின் சிறிய ஆனால் தெளிவான கட்டுரை, மற்றும் ஜனசக்தி ஆசிரியர் தோழர் டி.எம்.மூர்த்தியின் கட்டுரை இவைகள் அனைத்தையும் படித்து தெளிவு பெற்று இருப்பீர்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

ஒருவேளை படிக்க நேரமின்மை காரணத்தால் படிக்கத் தவறி இருந்தால் இதனைத் தேடி எடுத்த படித்து தெளிவு பெறுங்கள். மற்ற தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் எடுத்துக் கூறுங்கள்.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

இத் தேர்தலில் ஒன்றியத்தில் உள்ள பாஜக ஆட்சி அகற்றப்பட வேண்டும், ஜனநாயகம் காக்கப்பட வேண்டும், அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும், மதச்சார்பின்மை காக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல, சர்வாதிகாரத்தை, பாசிசத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாட்டை மீட்க வேண்டும் என்பதில் நாட்டின் மீது அக்கறை கொண்டோர் அனைவரும் மிகுந்த கவலையுடன் அணி சேர ஆயத்தமாகி வருகின்றார்கள்.

அனைவரையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவது என்பது எளிதான ஒன்றல்ல, மிக மிக கடினமானதுதான்.

ஆனாலும் கடினம் மெல்ல, மெல்ல குறைந்து வருகின்றது. ஒவ்வொரு கட்சியும் தங்களது சொந்த விருப்பு, வெறுப்புக்களை குறைத்து பொது நோக்குடன் இணைந்து செயல்பட முற்பட்டு வருகின்றனர் என்பது படிப்படியாக அதிகரித்து வருகின்றது.

இதனை அரசியல் ரீதியாக எதிர்கொள்ள இயலாத நிலையில் உள்ள பா.ஜ.க. எதிர்க்கட்சிகளை வஞ்சிக்க, அடக்க, ஒடுக்க துணிந்திட்ட பாசிச சக்திகள் குறுக்கு வழியை தேடுகின்றது.

தனக்கு கிடைத்திட்ட தற்காலிக அரசு அதிகாரத்தை கொண்டு வஞ்சக வலை வீசுகின்றது.

சிபிஐ, அமலாக்கத்துறை, வருமானவரித்துறை, நீதிமன்றங்கள், தேர்தல் ஆணையம் என அனைத்து அஸ்திரங்களையும் ஏவி விடுகின்றது.

பா.ஜ.க.வை எதிர்க்கும் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது, முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது ஏவி விடுகின்றது

பீகார் முன்னாள் முதல்வர் லல்லு பிரசாத் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது,

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா மற்றும் அவரது அமைச்சர்கள் மீது,

டில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் மற்றும் அவரது அமைச்சரவை துணை முதல்வர் மீது,

கேரளத்து முதலமைச்சர் தோழர் பினராய் விஜயன் மீது,

தெலுங்கு தேச முதலமைச்சர் சந்திரசேகர ராவ் மகள் மீது,

கர்நாடக காங்கிரஸ் தலைவர் மீது, காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய முன்னாள் தலைவர் ராகுல் காந்தி மீது

என வழக்குகள் தொடர்கின்றன. சிறையில் அடைக்கப்படுகின்றனர். இவர்களின் வீடு நோக்கி சிபிஐ பாய்கின்றது, அமலாக்கத்துறை அச்சுறுத்துகின்றது, வருமான வரித்துறை பாய்கின்றது.

தற்போது தமிழ்நாட்டில் முதலமைச்சர், அவரது குடும்பத்தினர், அமைச்சரவை சகாக்கள் என அனைவர் மீதும் அண்ணாமலை பாய்ந்துள்ளார்.

அவர்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றது? அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட போது வேட்பு மனுவுடன் இணைந்து வழங்கிய சொத்து விவரங்களை தொகுத்து பட்டியலிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் யோக்கியர் அண்ணாமலை.

அவர் கரங்களை அலங்கரிக்கும் கை கடிகாரம் மூன்று லட்சம். இதனை நண்பர் ஒருவர் அளித்தார்.

நான் பயணிக்கும் காரை, எனது நண்பர் ஒருவர் பயன்படுத்திக் கொள்ள அளித்துள்ளார்.

நான் பயன்படுத்தும் காருக்குரிய டீசலை ஒருவர் தினசரி வழங்கி வருகின்றார்.

நான் குடியிருக்கும் வீடு பெரிய வீடு, அதன் மாத வாடகை ரூ.3.75 லட்சம். அதனை ஒரு நண்பர் மாதந்தோறும் வழங்கி வருகின்றார்.

இப்படி தன் குறித்து, தன் யோக்கியதை குறித்து விளக்கம் அளித்து தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் பூ சுற்றுகிறார் அண்ணாமலை.

இப்படிப்பட்ட பரம யோக்கிய சிகாமணிதான், அடுத்தவர்கள் மீது குற்றம் சுமத்துகின்றார். இவை மட்டுமல்லாது, சி.பி.ஐ.யிடம் விரிவான புகார் அளிக்க உள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள தேசியக் கட்சிகள், மாநில கட்சிகள் என அனைத்தின் மீதும் பாய்ந்து குதறும் பா.ஜ.க. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மீது பாய ஒன்றும் கிடைக்கவில்லை.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள் உண்டு. ஒன்றிய, மாநில அமைச்சர்களும் உண்டு. ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்களும் உண்டு.

இவர்கள் எல்லாம் இருந்தாலும் இங்கே சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை என எவையும் பாய்ந்திட, சோதிக்க எதுவும் இல்லை என்பதால் வேறு வழிதேடியுள்ளது பா.ஜ.க.

அதுதான் தேர்தல் ஆணையம், அரசியல் அமைப்பு சட்டத்தால் உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையம், சுதந்திரமாகவும், சுயேட்சையாகவும் எவரது உத்தரவுக்கும் பணிந்திடாத அமைப்பு.

அதன் இன்றைய நிலை பரிதாபத்திற்குரியது.

அமலாக்கத்துறையும், வருமானவரித் துறையும், சி.பி.ஐ.யும் பா.ஜ.க. ஏவிவிடும் அம்புகளாக இயங்கி வருவது போன்று, இன்று தேர்தல் ஆணையமும் செயல்பட்டு வருவது ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

தேர்தல் ஆணையத்தின் மூலம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சீண்டி பார்க்கின்றது பாஜக.

நரிக்கு நாட்டாமை கொடுத்திட்டால் கிடைக்கு எட்டாடு கேட்கும் என்ற பழமொழி பொய்யல்ல; மெய்யே என நிரூபித்துள்ளது பா.ஜ.க.

கரையான் புற்றெடுக்க கருநாகம் குடியிருக்க என்பார்கள். ஆனால் கரையான் புற்று என யாரும் கூறுவதில்லை. பாம்பு புற்று என்றுதான் கூறுவார்கள்.

கரையான் தன் உழைப்பால் உருவாக்கிய புற்றை பாம்பு வஞ்சகமாக தனது பாதுகாப்பான குடியிருப்பாக பயன்படுத்திக் கொள்வது போன்று, இன்று நாட்டை வஞ்சகமாக வலைத்துப் போட்டு ள்ளது கொடிய விஷம் கொண்ட பா.ஜ.க.

நாட்டில் எதிர்க்கட்சிகளே இல்லாத ஒரே கட்சி, ஒரே ஆட்சி என்ற இறுமாப்புடன் செயல்பட்டு வருகின்றது.

இத்தகைய கொடிய சர்வாதிகார பாசிச பா.ஜ.க. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியை நிர்மூலமாக்க முனைந்து விட்டது.

கொடிய பாம்பே என்னை நீ அறியாய்! நான் யார் என்பதையும் அறியாய்!

நாட்டில் உள்ள திகார் சிறை முதல் அனைத்து சிறைச்சாலைகளின் சுவர்களைக் கேள், அங்கு பொருத்தப்பட்டுள்ள கம்பிகளை கேள், நான் யார் என்பது தெரியும்?

தூக்கு மேடைகளைக் கேட்டுப் பார், உனது ராணுவமும், காவல்துறையும் எப்போதும் கையில் ஏந்தியுள்ள துப்பாக்கிகளை கேட்டுப்பார்! நாங்கள் யார் என்பது புலப்படும்!

தியாகம் என்றால் அதன் விலை என்ன என்று கேட்கும் துரோக கும்பலான நீயா? தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி எங்களை ஆழம் பார்க்கிறாய்!

ஆழத்தையும், அகலத்தையும் அளந்து பார்த்தவர்கள் நாங்கள் என்பதனை அறிய உனக்கு ஞானம் கிடையாது.

நாட்டின் விடுதலைக்கு முன்னரும், பின்னரும் என பதினைந்து ஆண்டு காலம் தடை செய்யப்பட்ட இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி.

இத்தகைய அநீதி வேறு எக்கட்சிக்கும் இம்மண்ணில் ஏற்பட்டதுண்டா?

தொடர்ச்சி 5ம் பக்கம்



து.ராஜா Ex M.P.
பொதுச் செயலாளர், CPI

# அம்பேத்கரின் நிலைத்த பொருத்தப்பாடு

**ஏப்ரல் 14 அன்று அம்பேத்கரின் பிறந்தநாளை நாம் கொண்டாடி வரும் தருணத்தில், நீதி எனும் கருதுகோளை அடித்தளமாகக் கொண்ட அவர்தம் உலகப் பார்வை, சங்க பரிவாரங்கள் மற்றும் மோடி அரசாங்கத்தினால் மிகவும் சூட்சமுமாகத் திட்டமிடப்பட்டு, முற்றிலுமாகக் கேலிக்குரியதாக்கப்படுகிறது. இதுவே, இன்றைய இருள் படர்ந்த எதார்த்த நிலை ஆகும்.**

### பறிக்கப்படும் சம உரிமை

டாக்டர் அம்பேத்கர் மிகக் கவனமாக உருவாக்கிய அரசியலமைப்பில், குடிமக்கள் அனைவருக்கும் சமமாக வழங்கப்பட்டுள்ள உரிமைகள், தற்போது பறிக்கப்படுவதை, நிகழ்கால நாட்டு நடப்புகளின் மதிப்பீடுகள் அம்பலப்படுத்துகின்றன.

நாடாளுமன்றம் எதிர்கட்சிகளுக்கானது என்று அரசியல் நிர்ணய சபையில் அவர் தெளிவுபட பிரகடனம் செய்தார். பட்ஜெட் கூட்டத்தொடரின் போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பா.ஜ.க உறுப்பினர்கள் திட்டமிட்டு அவை நடவடிக்கைகளை முடக்கினார்கள். பா.ஜ.கவின் இந்த நடவடிக்கையானது, டாக்டர் அம்பேத்கர் உயர்த்திப் பிடித்த கொள்கைக்கு முற்றிலும் முரணானது ஆகும்.

### அதானியுடன் அறநெறியற்ற நெருக்கம்

அதானி குழுமங்களுடன் பிரதமர் மோடி கொண்டிருக்கும் அறநெறியற்ற நெருக்கம் குறித்து நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புவதற்கான ஜனநாயக ரீதியிலான வாய்ப்பை மறுத்திட வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன் பா.ஜ.கவினர் நாடாளுமன்றத்தை முடக்கியுள்ளனர். கார்ப்பரேட் நிறுவனங்களால் போற்றிக் கொண்டாடப்படும் முதல் இந்தியப் பிரதமர், அநேகமாக, மோடியாகத்தான் இருப்பார் என்று "Business and Politics in India" எனும் தங்களின் நூலில் கிறிஸ்டோபர் ஜெஃப்ரோலெட், அதுல் கோலி மற்றும் காந்தா முரளி ஆகியோர் குறிப்பிடுகிறார்கள்.

சலுகைசார் முதலாளிகளான அதானி போன்றோரை எதிர்த்து கேள்வி எழுப்ப ஆயத்தமாக இருந்த எதிர்கட்சிகளை, பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டு அமளியை உருவாக்கி, முடக்கினார்கள். நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் முடக்கமானது, நமது நாடாளுமன்ற வரலாற்றில் இதுவரை நாம் கேட்டறியாத ஒரு இழிவான நிகழ்வாகும்.

### நாடாளுமன்ற முடக்கம் கொடிய நோய்


நாடாளுமன்ற மாநிலங்கள் அவையின் தலைவராக கே.ஆர். நாராயணன் பொறுப்பு வகித்த போது, நமது சட்டமன்றங்களில் ஒழுக்கம் மற்றும் நன்னடத்தை எனும் தலைப்பில் 1992 ஆம் ஆண்டில் சொற்பொழிவாற்றினார். அதில், நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடக்கப்படுவதை, "தீநுண்மிகளால் உண்டாகும் கொடூரமான நோய்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கால சுழற்சியிலும், இந்தியாவில் ஜனநாயகத்தை ஆழப்படுத்துவதன் மூலமாகவும் இந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்று அவர் உறுதிபட நம்பினார்.

எனினும், பிரிவினைவாத, பாசிசசித்தாந்த வார்ப்புகளான பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனநாயக கட்டமைப்புகளின் அடித்தளங்களுக்கு பாதிப்புகளை உருவாக்கக்கூடிய நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிடுகிறார்கள். 2014 ஆம் ஆண்டு மோடி பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு, அரசாங்க அலுவல்களுக்கு மட்டும் வெறுமனே ஒப்புதல் அளிக்கும் ஒரு அமைப்பாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் குறுக்கப்பட்டு இருக்கும் அவல நிலையை இன்று நாடு சந்தித்து வருகிறது.

அரசாங்கம், சட்டமியற்றும் மன்றங்களுக்கு சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றம் பதிலளிக்கவேண்டிய பொறுப்புடையது எனும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மைய கோட்பாடு முற்றிலுமாகத் தூக்கியெறியப்பட்டு இருக்கிறது.

### நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்தும் பாஜக

நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு



ஏற்படுத்துவது என்பது எதிர்க்கட்சி வரிசையில் உள்ள கட்சிகள் கையாளும் நாடாளுமன்ற உத்தியின் ஒரு பகுதி ஆகும் என்று அப்போது எதிர்க்கட்சிதரப்பில் இருந்த பா.ஜ.க தலைவர் மறைந்த அருண் ஜெட்லி கூறியதுண்டு. நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டிய அரசாங்கத்தின் பொறுப்புடைமை இப்போது பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர்களால் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தப்படுகிறது. ஜனநாயகத்தைத் தூக்கியெறிவதற்கான செயல்திட்டத்தை பா.ஜ.க உறுப்பினர்கள் பிரகடனப்படுத்தி இருக்கிறார்கள்.

அரசியல் தளத்தில் மட்டுமின்றி, சமூக மற்றும் பொருளாதார தளங்களில் அவர்கள் கட்டவிழ்த்துவிட்டுள்ள வன்முறை காரணமாக, உண்மையில் இந்திய நாடு இருண்ட காலத்தில் மூழ்கிக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத்திற்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும் என்ற பொறுப்புடைமை கோட்பாட்டைத் தகர்த்து வரும் அதே வேளையில், மத அடிப்படையில் சமுதாயத்தையும், அரசியல் அமைப்பையும் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளில் சங்க பரிவார ஆட்சி தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சிறுபான்மையினரைக் குறிவைக்கும் வெறுப்புணர்வு பேச்சுக்கள், இசுலாமியருக்கு எதிரான சமூக மற்றும் பொருளாதாரபுறக்கணிப்பிற்கு அறைகூவல் விடுப்பது ஆகியவற்றுக்கு இந்துத்துவ தலைவர்களும், பா.ஜ.க நாடாளுமன்ற உறுப்பினர்களும் அளிக்கும் ஊக்கமும் உற்சாகமும் சங்க பரிவார ஆட்சியின் நடவடிக்கைகளுக்குப் போதுமான ஆதாரங்கள் ஆகும்.

சமுதாயத்தையும், அரசியல் அமைப்பையும் பிராமணீய மனுவாத அரசியல் சூழ்ந்துள்ள இந்த நெருக்கடியான சூழலில், "இந்தியாவில் அரசியல் என்பது வேத சாஸ்திரங்களின் நடைமுறையே" என்று 1928 ஆம் ஆண்டு அம்பேத்கர் கூறிய வேதனை தொனிக்கும் கருத்தானது, மோடியின் 'புதிய இந்தியாவில்' ஒரு எதார்த்த நிலையாகி இருக்கிறது.

சமுதாயத்தையும், அரசியல் அமைப்பையும் முற்போக்கு தன்மையுடையதாகவும், மதச்சார்பற்றதாகவும் மாற்றியமைக்க வேண்டும் என்ற அவர்தம் முழக்கத்தில் தான் இது போன்ற பிராமணீய மனுவாத அரசியலுக்கு எதிரானதீர்வு அடங்கியுள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள, உச்சநீதிமன்றத்தால் அரசியல் அமைப்பின் அடிப்படை கட்டமைப்பு என்று உயர்த்திப் பிடிக்கப்பட்டு வரும்

> அரசியலை மதத்தோடு இணைத்துக் குறுக்குபவர்கள் மற்றும் மக்களிடையே வெறுப்புணர்வு, அச்சவுணர்வைப் பரப்புபவர்களுக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றத்தின் கருத்துகள் மீண்டும் நிலைநிறுத்துகின்றன.

மதச்சார்பின்மையை, அரசியலமைப்பின் உயர் பதவிகளில் இருப்பவர்களும், பா.ஜ.கவின் தலைவர்களும் தகர்த்து வருகிறார்கள்; கேலிக்குரியதாக்குகிறார்கள்! என்னவொரு மோசமான முரண்!

### வெறுப்புணர்வை உமிழும் இந்து தேசியம்

அரசு நிர்வாகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் பா.ஜ.க தலைவர்கள் 'இந்து தேசியம்' கோட்பாட்டை இப்போது மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்கள். எண்ணற்ற வெறுப்புணர்வுமிக்க நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். லவ் ஜிகாத், பசு பாதுகாப்பு இன்ன பிற வெறித்தனமான கட்டுக்கதைகளை அவர்கள் புனைந்து வருகிறார்கள். இசுலாமியர்களுக்கு எதிரான ஒரு நீடித்த பரப்புரை, சமுதாயத்தில் மத அடிப்படையிலான பிளவை ஆழப்படுத்தி வருகிறது. இந்து தேசியத்தை அம்பேத்கர் மறுதலித்தார் என்பதை பா.ஜ.க கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்து தேசியம் இந்தியாவிற்குப் பேரழிவை ஏற்படுத்தும் என்று கூறிய அவர், இந்தியர்கள் தங்கள் வலிமை அனைத்தையும் ஒருங்கே திரட்டி இந்து தேசியத்தை முறியடிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் என்பதையும் பா.ஜ.க கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்துத்துவ வெறியால் பரப்பப்படும் வெறுப்பு பேச்சுக்களை எதிர்கொள்வதில் அரசு செயலிழந்து போய்விட்டதாக மாண்பமை உச்ச நீதிமன்றம் அண்மைக் காலத்தில் மிகக் காட்டமாக இடித்துரைத்துள்ளது. மதத்தில் இருந்து அரசியலைப் பிரிப்பது தான் இது போன்ற வெறுப்பைத் தூண்டும் பேச்சுக்களுக்கான தீர்வு என்றும் உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறது. அரசியலை மதத்தோடு இணைத்துக் குறுக்குபவர்கள் மற்றும் மக்களிடையே வெறுப்புணர்வு, அச்சவுணர்வைப் பரப்புபவர்களுக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட நிலைப்பாட்டை உச்ச நீதிமன்றத்தின் கருத்துகள் மீண்டும் நிலைநிறுத்துகின்றன.

### குடிமக்களின் பாதுகாப்பை அச்சுறுத்தும் ஆர்.எஸ்.எஸ்.

பா.ஜ.க மற்றும் இந்துத்துவ தலைவர்களின் வெறுப்புணர்வு பேச்சுக்கள் இசுலாமியர்களைக் கடும் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியிருக்கிறது. சிறுபான்மையினரை அச்சுறுத்தும் கருத்துகளை வெளியிடும் தலைவர்களைத் தடுக்கவில்லை என்றால், இசுலாமியர்களுக்கு எதிரான ஒரு போர் தொடுக்கப்படும் என்று 1946 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபையில் அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கை நிஜமாகி இருக்கிறது. இசுலாமியர்களின் பாதுகாப்பற்ற நிலை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

ஆர்.எஸ்.எஸ் தலைவரின் வினோதமான அறிக்கை, இந்துக்கள் ஆயிரம் ஆண்டுகளாக ஒரு யுத்தத்தை மேற்கொண்டு இருப்பதால் அவர்கள் மூர்க்கத்தனமாக இருப்பது இயல்பானது என்று கூறுகிறது. அவரது இந்தக் கருத்து நிலைமையை மேலும் மோசமாக்கி, குடிமக்களின் பாதுகாப்பை அபாயத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது.

அதிகாரத்தில் இருப்பவர்களின் ஆதரவுடன், வகுப்புவாத மற்றும் பிரிவினைவாத சக்திகள் இடும் ஆணைகள் காரணமாகத் தலித்துகளும், பெண்களும் எதிர்கொண்டு வரும் வன்முறைகள் அதிகரித்துள்ளது. இத்தகைய வகுப்புவாத சக்திகள், இந்நாட்டு மக்கள் மீது ஒற்றைத் தன்மை கொண்ட சமூக அரசியல் முறையைத் திணிக்க முயலுகின்றன. இது, தற்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாற்றாக மனுஸ்மிருதியைக் கொண்டு வருவதற்கான முயற்சி ஆகும்.

மனுஸ்மிருதி சமத்துவமின்மை, சாதிய படிநிலை மற்றும் பெண்ணடிமைத்தனத்தை நிலைபெறச் செய்வதாகும்.

இது போன்ற கொந்தளிப்பான காலகட்டத்தில், நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற, அம்பேத்கரின் அனைவரையும் உள்ளடக்கிய பார்வை தேவையாகும்.

– தமிழில் அருண் அசோகன்

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 03

# இந்திய பால் சந்தையைக் கைப்பற்ற குஜராத்திகளின் சதி!

தமிழ்நாடு கூட்டுறவு பால் நிறுவனமான ‘ஆவின்’ மற்றும் கர்நாடக கூட்டுறவு பால் நிறுவனமான ‘நந்தினி’ ஆகியவை தயாரிக்கும் தயிர் பாக்கெட்டுகளில் ‘தஹி’ என்று இந்தியில் பெரிதாக அச்சிட வேண்டும், தேவையானால் சின்னதாக அடைப்பு குறிக்குள் தயிர் என்று போட்டுக் கொள்ளலாம் என உணவு பாதுகாப்பு மற்றும் தரப்படுத்தலுக்கான இந்திய ஆணையம் (எஃப் எஸ் எஸ் ஏ ஐ) சில வாரங்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியிட்டது எல்லோருக்கும் தெரியும். உணவின் தரத்தைப் பார்க்க வேண்டிய அந்த நிறுவனம், ஏன் அதன் பெயரை இந்தியில் மாற்றத் துடிக்கிறது?

தமிழில் ‘தகி’ என்றால் பெரும் சூடு என்று பொருள். வெயில் தகிக்கிறது என்கிறோம் அல்லவா? இந்த அறிவிப்பின் பின்னேயும் ஒரு சூடு இருப்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

கர்நாடக மாநிலத்துக்குள், குஜராத்தைச் சார்ந்த பால் கூட்டுறவு நிறுவனமான ‘அமுல்’ தனது பால் விற்பனையை முதல் முறையாக துவக்கியது. மாநிலங்களின் தனி உரிமையாக இருந்த ‘கூட்டுறவை’ அண்மையில் மத்திய அரசு பறித்துக் கொண்டது. அமித்ஷா தான் ஒன்றிய கூட்டுறவு அமைச்சர். அவர் கர்நாடக மாநிலத்தில் பேசும் போது, அமுலும் நந்தினியும் இனி இணைந்து செயல்பட வேண்டும் என்று பேசினார். இதனைக் கண்டித்து ‘அமுல் நிறுவனமே வெளியேறு’, நந்தினியை பாதுகாப்போம் என்று சமூக ஊடகங்களில் ஹேஸ்ட்டாக்குகளை லட்சக்கணக்கில் ‘கன்னடிகா’க்கள் பறக்க விட்டார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது.

அமுல் கூட்டுறவு நிறுவனத்திற்கு கர்நாடகாவில் பால் உற்பத்தி நிலையங்களோ, பதப்படுத்தும் தொழிற்சாலைகளோ இல்லை அவை அனைத்தும் குஜராத், மகாராஷ்டிராவில் உள்ளன. பால் மற்றும் பால் பொருள்களுக்கான வளம் மிக்க சந்தையான கர்நாடகத்தை கைப்பற்ற வேண்டும் என்பது இதன் பின்னுள்ள நோக்கம். அமுல் விற்பனை அதிகமானால், நந்தினி நிறுவனத்தை நம்பி, மாடுகளைக் கறவை செய்து கொண்டிருக்கும் பால் உற்பத்தியாளர்களான கர்நாடக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

அதுமட்டுமின்றி அமுல் பாலின் விலை லிட்டருக்கு 57 ரூபாய். ஆனால் நந்தினி பாலின் விலை ஒரு லிட்டருக்கு 39 ரூபாய் தான். உயர்ந்த விலை கொடுத்து பாலை வாங்க வேண்டும் என்ற கட்டாயம் கர்நாடக மக்கள் மீது திணிக்கப்படுகிறது.

குஜராத்தில் ஆனந்த் மாவட்டத்தில் இந்த கூட்டுறவு நிறுவனத்தை வடிவமைத்து, தெருத்தெருவாய் அலைந்து விவசாயிகளை பால் உற்பத்தி செய்ய வைத்து, இதனை பெரிய நிறுவனம் ஆக்கியவர் கேரளாவைச் சேர்ந்த குரியன் ஆவார். வாழ்நாள் முழுக்க இப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். பத்தாண்டுகளுக்கு முன்பு அவர் ஈவிரக்கமின்றி வெளியேற்றப்பட்டார்.

அவர் இருந்த நேரத்தில், அமுல் பால் உற்பத்தி சங்கங்களில் விவசாயிகளே நிர்வாகிகளாக இருந்தார்கள். நிர்வாகப் பொறுப்பில் அரசியல்வாதிகள் அதிகம் பேர் இல்லை. கடந்த 20 ஆண்டுகளாக ராம் சிங் பார்மர் என்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த விவசாயி அமுல் நிறுவனத்தின் தலைவராக இருந்தார். இப்போது அவரை வெளியேற்றிவிட்டு, பிஜேபி மாவட்ட தலைவரான விபுல் பட்டேல் என்பவரை சில மாதங்களுக்கு முன்பு அமுல் நிறுவனத்தின் தலைவராக்கி இருக்கிறார்கள்.

மறுமுனையில், நாளொன்றுக்கு 99 லட்சம் லிட்டர் பாலை கொள்முதல் செய்து விநியோகித்து வந்த நந்தினி நிறுவனத்தின் கொள்முதல், 71 லட்சம் லிட்டராக குறைக்கப்பட்டு இருக்கிறது. அதாவது அமல் நிறுவனம் பால் விற்பனையை துவங்குவதற்கு வசதியாக நந்தினியின் செயல்பாடு குறைக்கப்பட்டுள்ளது.

எல்லா அடிப்படைத் தேவைகளுக்கும் இந்தியாவின் பிறமாநிலங்கள் குஜராத்திகளின் தயவை நாடி நிற்க வேண்டும் என்பது பிஜேபியின் தந்திரமாகும்.

இந்தியாவில் டெல்லியில் ‘மதர் டெய்ரி’, கேரளாவின் ‘மில்மா’ தமிழ்நாட்டின் ‘ஆவின்’, கோவாவின் ‘கோவாடெய்ரி’, மகாராஷ்டிராவின் ‘மகானந்த்’, ஆந்திர பிரதேசத்தின் ‘விஜயா’ ஆகியவை புகழ்பெற்ற பால் கூட்டுறவு நிறுவனங்களாகும். முதலில் தன் கட்சி ஆளுகிற கர்நாடகாவின் தலையில் குஜராத்திகள் கை வைக்கிறார்கள்.

ஒரு பால்வள கூட்டுறவு இணையம், இன்னொரு மாநிலத்துக்குள் நுழையக்கூடாது என்பது புறம் தள்ளப்பட்டு இருக்கிறது.

எல்லா பொதுத்துறை கூட்டுறவு நிறுவனங்களும் தனியார் மயப்படுத்தப்பட்டு வரக்கூடிய வேளை இது. அமுலையும் நந்தினியையும் இணைத்து உருவாக்கப்படும் பிரமாண்டமான பால் உற்பத்தி நிறுவனம், நாளையே தனியார் மயமாக்கப்படாது என யாராலும் உத்தரவாதம் கொடுக்க இயலாது. அம்பானியிடமா, அதானியிடமோ போய்ச் சேரலாம்.

கர்நாடக மக்களின் கடும் எதிர்ப்பும், நடக்க இருக்கிற கர்நாடக சட்டப்பேரவை தேர்தலும் நந்தினியை கைப்பற்றும் குஜராத்திகளின் முயற்சியை இப்போதைக்குத் தடுத்துள்ளன.

தமிழ்நாட்டில் இப்போதே நிறைய பிற மாநிலங்களைச் சேர்ந்த தனியார் பால் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டுள்ளன. நாளை இதே அழுத்தம் ஆவினுக்கும் வரலாம்.

எதிர்க்கத் தயாராக இருக்க வேண்டும்!

அறிவியல்




# செவ்வாய் கிரகத்தை, நிலவை பங்கு போடத் துடிக்கும் கார்ப்பரேட்டுகள்!



அருண் நெடுஞ்செழியன்

எலான் மஸ்க் என்பவரின் SPACE-Xநிறுவனம் விண்வெளித் துறையில் நிகழ்த்திவருகிற சாதனைகளை விளக்குகிற ஆவணப்படம் RETURN TO SPACE.

விண்வெளியில் சுற்றி வருகிற சர்வதேச விண்வெளி ஆய்வுக் கூடத்திற்கு, SPACEX இன் ராக்கெட் மூலமாக இரண்டு விண்வெளி வீரர்களை அனுப்பி மீண்டும் பத்திரமாக பூமிக்கு தரை இறக்கிய முதல் தனியார் நிறுவனம் என்ற சாதனை படைத்தது.

எலான் மஸ்க் தலைப்புச் செய்திகளில் வரத் தொடங்கினார். 1950–70 களில் அமெரிக்காவிற்கும் சோவியத் ரஷ்யாவிற்கும் இடையே நிலவிய விண்வெளி போட்டி அனைவரும் அறிந்த ஒன்றுதான். இந்த போட்டியானது, அறிவியல், வானியற்பியல் மற்றும் விண்வெளித்துறையில் தொழில்நுட்ப வளர்ச்சியையும் சாதனைகளையும் நிகழ்த்தியது. கூடவே விண்வெளி மீது அறி வியலாளர்கள் மற்றும் மக்களின் ஆர்வத்தையும் முடிக்கிவிட்டது.பல விண்வெளி சாதனைகள் சாத்தியப்பட்டன.

உலகின் முதல் செயற்கைகோளை (Sputnik 1) வெற்றிகரமாக பூமியின் சுற்றுப்பாதையில் அனுப்பியது.

உலகின் முதல் விண்வெளி வீரரையும், முதல் வீராங்கனையையும் விண்ணிற்கு அனுப்பியது.

முதல் விண்வெளி ஆய்வுக் கூடத்தை நிறுவியது என சோவியத் ரஷ்யா பல “முதல்” சாதனைகளை நிகழ்த்தியது.இந்த space race இன் முத்தாய்ப்பாக நிலவில் முதல் மனிதனை 1969 இல் அமெரிக்கா இறக்கியது. space race இல் அமெரிக்காவின் வெற்றியாக இது கொண்டாடப்பட்டது.

விண்வெளி ஆய்வில் பெரும் பாய்ச்சலாக கருதப்பட்ட இந்த நிகழ்வு அடுத்த சில ஆண்டுகளில் சுணக்கம் கண்டது. 1972க்கு பிறகு நிலவிற்கு மனிதர்களை அனுப்புகிற திட்டத்தை அமெரிக்கா உட்பட எந்த நாடும் சாத்தியப்படுத்தவில்லை. சோவியத் தகர்விற்கு பிறகு ரஷ்யாவும் பெரிதாக இத்துறையில் அக்கறை கொள்ளவில்லை.

2003 இல் அமெரிக்காவின் கொலம்பியா ராக்கெட் வெடித்து சிதறிய விபத்தில் கல்பனா சாவ்லா உள்ளிட்ட 7 வீரர்கள் பலியானதைத் தொடர்ந்து நாசா தனதுவிண்வெளி கொள்கையை, திட்டங்களை மறு வரையறை செய்யத் தொடங்கியது.புஷ் அரசு, அதைதொடர்ந்து வந்த ஒபாமா அரசும் நாசாவின் பெரும் விண்வெளித் திட்டங்களை சுருக்கிவிட்டது. சர்வதேச பொருளாதார நெருக்கடிகளில் அமெரிக்கா சிக்கியதும் கூட இந்த கொள்கை மாற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம்.

அமெரிக்க அரசின் இந்த கொள்கை மாற்ற முடிவானது விண்வெளித்துறையை வணிகமயப் படுத்துவதை நோக்கி நகர்ந்தது.நாசா ஒழுங்குமுறை ஆணையம் போலவும் இதுகாறும் தான் உருவாக்கியிருந்த உட்கட்டமைப்பு வசதிகளை தனியார் நிறுவனங்கள் பயன்படுத்திக்கொள்கிற நிறுவனமாகவும் மாறுகிறது.

எலன் மஸ்க் இந்த கட்டத்தில் விண்வெளித்து துறைக்குள் நுழைகிறார்.தனக்கு போட்டியாக இருந்த போயின்ங் நிறுவனத்தை கிட்டத்தட்ட ஓரம்கட்டுகிறார்.நாசவுடன் ஒப்பந்தம் போடப்படுகிறது.நாசவுக்காக spacex நிறுவனத்தின் வழியே ராக்கெட் உற்பத்தியை தொடங்குகிறார்.FALCOLN என பெயரிடப்படுகிற எலான் மஸ்கின் ராக்கெட்கள் பல சோதனை பரிசோதனை ஓட்டங்களை கடந்து வெற்றிகரமாக விண்ணில் மனிதர்களை அனுப்பிகிற ராக்கெட் தொழில்நுட்பத்தில் முத்திரை பதிக்கிறது.

அமெரிக்க வீரர்களை விண்வெளியில் அனுப்புவதற்கான அனுமதியையும் SPACE X நிறுவனத்திற்கு நாசா வழங்குகிறது. இதுகாறும் ராக்கெட் தொழில்நுட்பத்தில் திரட்டப்பட்ட அறிவும் ஆற்றலையும் திறம்பட கையாண்ட எலான் மஸ்க், மீண்டும் பயன்படுத்தமுடிகிற(RE USABLE) ராக்கெட் தொழில்நுட்பத்தை சாத்தியப்படுத்தியதன் வழியே ராக்கெட் தயாரிப்பு செலவை மிச்சப்படுதியது.

அண்மையில் தொழிலதிபர் ஜாரிட் ஐசக்மேன் உட்பட நான்கு பேரை விண்வெளிக்கு வெற்றிகரமாக அனுப்பியதன் வழியே புவிக்கு வெளியே முதல் சுற்றுலாவை மேற்கொண்ட தனியார் நிறுவனம் என்ற முதல் பெருமையையும் space x பெற்றது.

தற்போது Dear moon என்ற திட்டத்தில், நிலவின் மேற்பரப்பில் மனிதர்களை spacex அழைத்துச் செல்ல உள்ளது.அடுத்து சில ஆண்டுகளில் நிலவில் மீண்டும் மனிதர்களை இறக்குகிற திட்டதையும் spacex அறிவித்துள்ளது.

இம்முறை நிலவில் முதல் முறையாக பெண்ணை இறக்க போவதாக கூறியுள்ளது.

அடுத்த சில பத்தாண்டுகளில் செவ்வாய்க்கு ராக்கெட் அனுப்புகிற திட்டமும்,நிலவில் ஒரு முகாம் அமைக்கிற திட்டம் என அடுத்தடுத்த விண்வெளி பாய்ச்சல்களை spacex நிகழ்த்தவுள்ளது.

அரசுத்துறை நிறுவனங்கள் விண்வெளித்துறையில் இருந்து ஒதுங்குவதும், உலகின் பெரும் பணக்கார்கள் விண்வெளித்துறையை தொழிலாக மாற்றுவதும் எங்கு போய் முடியபோவது எனத் தெரியவில்லை. அரசுகள், ராணுவத்திற்கு ஒதுக்குகிற நிதியில் நூறில் ஒரு பங்கை விண்வெளி ஆய்விற்கு ஒதுக்கினாலே போதும். ஆனாலும் அரசிற்கும் அதில் எந்தா நாட்டமும் இல்லை.

முதலாளித்துவம் தற்போது புதிதாக ஒரு சந்தையை பிடித்துக் கொண்டது, அல்லது உருவாக்கிக் கொண்டது. இனி செவ்வாய் கிரகத்தையும், நிலவையும் தனியார் நிறுவனங்கள் பங்கு போட்டுக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.அறிவியல் சாதனைகள் என்ற திரைக்கு பின்னே வர்க்க முரண்பாடுகள் வெற்றிகரமாக மறைக்கப்படும்!

மார்க்ஸ் தனது கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் கூறுவது போல முதலாளித்துவமானது, மருத்துவர், அறிவியலாளர் போன்ற துறை சார் நிபுணர்களை கூலிக்கு உழைப்பை விற்கிறவர்களாக மாற்றி விட்டது. நவீன அறிவியல் துறையின் அறி வியலாளர்களும் இனி SPACE X நிறுவனத்தின் பங்கு வர்த்தக உயர்விற்கும் உலகின் பணக்கார வரிசைப் பட்டியலில் எலான் மாஸ்க் தொடர்ந்து முதலிடத்தில் நீடிப்பதற்கும் உழைப்பார்கள்.எலான் மாஸ்க் விண்வெளித்துறையின் ஹீரோவாக கொண்டாடப்படுவார். RETURN TO SPACE அதைத் தொடங்கிவிட்டது.

தொடர்புக்கு: 88254 25912

## கர்நாடக தேர்தலில்

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பெருந்தன்மை!



ஹரீஷ் பாலா

**கர்நாடக மாநிலத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் மே 10 ஆம் நாள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. வேட்புமனு தாக்கல் சூடு பிடித்து உள்ளது. தேர்தல் களத்தில் காங்கிரஸ், பாஜக, மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சிகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது.**

கர்நாடக அரசியலில் சாதி ஆழமாக வேரூன்றி இருக்கிறது. சாதிகள் தங்களின் தலைவர்களை முன்னிலைப் படுத்துவதால் பலமான மாநிலக் கட்சிகள் இங்கு உருவாகவில்லை.

கர்நாடக மாநிலத்தை 6 பகுதிகளாக பிரிக்கலாம். பழைய மைசூர்: மண்டியா, ஹாசன், மைசூர், சாம்ராஜ் நகர், ராம் நகர், தும்கூர் மாவட்டங்களை உள்ளடக்கியது. ஒக்கலிக கவுடர்கள் ஆதிக்கம் செலுத்தும் பகுதி. இங்கு பாஜக பெரிய அளவில் இல்லை. மஜத காங்கிரஸ் நேரடிப் போட்டி நிலவும் பகுதி.

கடலோர கராவலி பகுதி: மங்களூர், தட்சிண கன்னடா, உடுப்பி மாவட்டங்களை உள்ளடக்கிய இந்தப் பகுதி ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் மதக் கலவர பரிசோதனைக் கூடம். ஹிந்து – முஸ்லிம் வேறுபாடுகளை ஏற்படுத்தி கர்நாடக மாநிலத்தில் இந்தப் பகுதி மூலம் தான் பாஜக கால் ஊன்றியது. பள்ளிகளில் ஹிஜாப் அணிவது குறித்த சமீபத்திய சர்ச்சை கூட இங்கு தான் வெடித்தது.

கித்தூர் கர்நாடகா: இது மொழிவழி மாநிலங்கள் அமைவதற்கு முன்னர் பம்பாய் மாகாணத்தில் இருந்ததால் இது பம்பாய் கர்நாடகா என்று அறியப்படுகிறது.

கல்யாண கர்நாடகா: மொழிவழி மாநிலங்கள் அமைவதற்கு முன்னர் இப்பகுதிகள் ஹைதராபாத் சமஸ்தானத்தின் பகுதியாக இருந்ததால் இது ஐதராபாத் கர்நாடகா என்றும் அழைக்கப் படுகிறது.

மத்திய கர்நாடகா பகுதி: தாவணகெரே, பெல்லாரி, விஜயநகர மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி.

பெங்களூரு பகுதி: தலைநகர் பெங்களூரு மற்றும் பெங்களூரு புறநகர் மாவட்டங்களில் உள்ள 28 தொகுதிகளை கொண்டுள்ளது. இதில் கித்தூர் கர்நாடகா, மத்திய கர்நாடகா, கல்யாண கர்நாடகா பகுதிகளில் தேர்தல் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது லிங்காயத் சமூக வாக்குகள்தான். இப்படி சமுதாய ரீதியில் கர்நாடகா பிரிந்து கிடக்கிறது.

எடியூரப்பா லிங்காயத் சமூகத்தின் தலைவர். அவர் பின்னால் அந்த சமூக வாக்குகள் அணி வகுப்பது பாஜகவுக்கு சாதகமாக இருந்தது. அவரை முதல்வர் பொறுப்பில் இருந்து பாஜக டெல்லி தலைமை அகற்றியது, முன்னாள் முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் பாஜகவை துறந்து காங்கிரஸில் சேர்ந்தது போன்ற காரணங்களால் பாஜகவுக்கு எதிராக லிங்காயத் மக்கள் வாக்களிக்க முடிவு எடுத்துள்ளதாக தெரிகிறது. இது காங்கிரஸ் கட்சிக்கு சாதகமாக இருக்கும்.

பழைய மைசூர் பகுதியில் ஒக்கலிகர் வாக்குகளை மட்டுமே நம்பி ம.ஜ.த. களம் இறங்குகிறது. அந்தப் பகுதியில் உள்ள 60 தொகுதிகளை குறி வைத்து அதில் வெற்றி பெற்றால் தொங்கு சட்டமன்றம் அமையும் அப்போது முதல்வர் ஆகலாம் என்ற பழைய ஃபார்முலாவை நம்பி இப்போதும் நகர்கிறது மதச்சார்பற்ற ஜனதா தளம்.

ஆனால், இம்முறை காங்கிரஸ் கட்சி பலம் பொருந்திய டி.கே.சிவகுமார் மூலம் அந்தத் திட்டத்தை தவிடு பொடி ஆக்க முனைப்புடன் செயல் பட்டு வருகிறது. இது தவிர சித்தராமையா அவர்கள் அமைத்த அஹிந்தா சமூக கூட்டணி ( ஒக்கலிகர், லிங்காயத் அல்லாத மற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர், சிறுபான்மையினர் சேர்ந்த சமூக கூட்டணி) காங்கிரஸ் கட்சிக்கு நம்பிக்கை கொடுக்கிறது.

### காங்கிரசுக்கு வெற்றி வாய்ப்பு

பெரும்பான்மை கருத்துக் கணிப்புகளும் கூட காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று தெரிவிக்கின்றன. ஆகவே காங்கிரஸ் கட்சி நம்பிக்கையுடன் தேர்தல் பணி ஆற்றி வருகிறது.

மறுபுறம் பாஜகவில் அவநம்பிக்கை வெளிப்படுகிறது. கர்நாடக முதல்வர்களில் மிகவும் பலவீனமான முதல்வர் என்ற பெயரை பசவராஜ் பொம்மை பெற்றுள்ளார். அரசு ஒப்பந்தகள் அனைத்திலும் பாஜக மந்திரிகளும், சட்டமன்ற உறுப்பினர்களும் 40% கமிசன் கேட்பதாக அரசு ஒப்பந்ததாரர்கள் சங்கம் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி குற்றம் சுமத்தியது.

பெலகாமை சேர்ந்த அரசு ஒப்பந்ததாரர் சந்தோஷ் பாட்டீல் சங் பரிவார் அமைப்பைச் சேர்ந்தவர். அவர் சில அரசு ஒப்பந்தங்களை செய்து கொடுத்தார். 40% கமிசன் பணத்தை முன்னரே கொடுத்தால் தான் பணி கொடுக்கப்படும் என்று அன்றைய மந்திரி ஈசுவரப்பா வலியுறுத்துகிறார் என்று பிரதமருக்கும், முதல்வருக்கும் கடிதம் எழுதினார்.

அது குறித்து நடவடிக்கை இல்லாததால் தற்கொலை செய்து கொண்டார். இது மாநிலத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஈசுவரப்பா ராஜினாமா செய்தார். இவை பாஜக ஒரு ஊழல் கட்சி என்ற பெயரை கர்நாடகாவில் எடுக்க வழிவகை செய்தது. இது, தேர்தலில் பாஜகவுக்கு பெரும் பின்னடைவாக உள்ளது. பாஜக தொண்டர்கள் சோர்வில் உள்ளனர். மோடி பிரச்சாரம் கைகொடுக்கும் என்று பாஜக நினைக்கிறது. ஆனால் இம்முறை அது எடுபடுவது சந்தேகம் தான்.

### எதிர்க்கட்சிகள் ஒற்றுமைக்கு சிபிஐ முயற்சி

இடதுசாரி, மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளை ஒருங்கிணைக்கும் போக்குகள் தேசிய அளவில் நடக்கும் போது அது கர்நாடகாவில் சாத்தியம் ஆக்க வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி முயன்றது.

தேர்தல் அறிவிப்புக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இது குறித்து மாநில காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் டி.கே.சிவகுமார் அவர்களுக்கும் கட்சியின் மாநிலச் செயலாளர் சாத்தி சுந்தரேஷ் கடிதம் எழுதினார். ஆனால், எந்த பதிலும் வரவில்லை. ஆகவே, எல்லா இடங்களிலும் போட்டியிட்டு பாஜகவுக்கு எதிரான வாக்குகளை பிரிக்க வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் ஏழு தொகுதிகளில் மட்டும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட முடிவு செய்து உள்ளது.

மேல்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் விவசாய சங்கம் சார்பில் சுயேட்சையாக போட்டியிடும் தர்ஷன் புட்டண்ணய்யா, பாகேபள்ளி தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் அணில் ஆகியோருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு வழங்கியுள்ளது.

### 214 தொகுதிகளில் காங்கிரசுக்கு ஆதரவு

மீதம் உள்ள 214 தொகுதிகளிலும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு என்ற நிலையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துள்ளது. எதிர்கட்சிகள் ஒற்றுமை குறித்து காங்கிரஸ் கவலை கொள்ளாத நிலையிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக கோலார் தங்க வயல் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளரை அறிவித்துள்ளது.

இந்தச் சூழலிலும் எதிர்க்கட்சிகள் ஒற்றுமை என்ற ஒற்றைப் புள்ளியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துள்ள பெருந்தன்மையான முடிவுக்கு கர்நாடகாவில் உள்ள முற்போக்கு சிந்தனையாளர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் கோலார் தங்க வயல் பகுதியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுவுடமை கொள்கைகளில் பிடிமானமுள்ள குடும்பத்தை சேர்ந்த தமிழரான ஜோதிபாசு அவர்களை வேட்பாளர் ஆக்கி உள்ளது. கோலார் தங்க வயலில் 1952 இல் நடந்த முதல் பொதுத் தேர்தல் உட்பட பல தேர்தல்களில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றுள்ளது. கே. எஸ்.வாசன், எம்.சி.நரசிம்மன், ராஜகோபால் போன்றவர்கள் கட்சியின் சார்பில் சட்டமன்றம் சென்றுள்ளனர்.

1964 கட்சிப் பிளவுக்கு பின்னரும் மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மணி வெற்றி பெற்றுள்ளார். மூடப்பட்டுள்ள தங்கச் சுரங்க தொழிலாளர்களின் பிரச்சனையை கையிலெடுத்து தொடர் போராட்டங்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி செய்துவருவதால், அப்பகுதி தமிழர்களின் வாக்கு இம்முறை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வலு சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

ஏப்ரல் 30 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் பரப்புரை செய்கிறார். தமிழகத் தலைவர்கள் பலரை களமிறக்க கட்சி முடிவு எடுத்துள்ளது.

கார்ப்பரேட்டுகள் எதிர்ப்பு, வலதுசாரி எதிர்ப்பு இவற்றிற்கு எதிரான பரந்த ஒற்றுமை என்பதைப் பற்றி இந்தத் தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கர்நாடகம் எங்கும் பிரச்சாரம் செய்கிறது.

தொடர்புக்கு: 96637 74858

**கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் சிபிஐ வேட்பாளர்கள்**




கூடிலிகி தொகுதி வீரண்ணா | சிரா தொகுதி கிரிஷ் | மூடிகெரே தொகுதி ரமேஷ் கெலகுர் | மடிக்கேரி தொகுதி சோமப்பா | தங்கவயல் தொகுதி ஆர்.ஜோதிபாசு | ஆலந்த் தொகுதி மவுலா முல்லா | ஜேவர்கி தொகுதி மகேஷ்குமார்

2 ம் பக்கத் தொடர்ச்சி

பிறந்த நாளில், பச்சிளம் சிசு என்று கூடப் பாராமல் குரலை நெரித்து கொல்ல துடித்த கூட்டத்திடமிருந்து உதறித் தள்ளி, அஞ்சாது நெஞ்சை நிமிர்த்தி போர்க் கோளம் பூண்டவனடா நாங்கள்!

எங்களிடமா உன் சித்து விளையாட்டை காண்பிக்க துணிகின்றாய்!

மகனே உனக்கு தத்துவ பலமிருந்தால் வா, கொள்கை பலமிருந்தால் வா, என் தத்துவத்தோடு மோதிப்பார்!

வெல்லற்கரியதத்துவபலத்தைஉன்னால் அல்ல, உனது குருநாதன் ஹிட்லரால் கூட, வெல்ல முடியவில்லை என்பது மட்டுமல்ல, எங்கள் முன்னால் மண்டியிட்டு மடிப்பிச்சை கேட்டான். உலகின் மாவீரனாகக் காட்டிக் கொண்டவன் கோழையிலும், கோழையாய் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போனான் என்கிற வரலாற்றை அறிவாய், அறிந்து கொள்ள முயற்சிப்பாய்!

ஆணையம் அல்ல எதனையும் எம்படை எதிர்கொள்ளும்!

ஏற்றுக்கொண்ட லட்சியத்தை காட்டிலும் எதுவும் எனக்குப் பெரிதல்ல!

ஏற்றுக் கொண்ட லட்சியம் நிறைவேற எத்தகைய தியாகத்திற்கும் எம் படை தயார்! தயார்!

தேர்தல் ஆணையத்தின் அர்த்தமற்ற அறிவிப்பால்,

விரக்தியின் விளிம்பிற்கு செல்வேன் – சோர்ந்து முடங்கி மூளையில் அமர்ந்திடுவேன் என்று கனவு காணாதே!

என்னை அங்கீகரிப்பவன் நீ அல்ல! உனக்கு அத்தகைய உரிமையும் இல்லை.

என் உடலோடு, என் இரத்தத்தோடு என்றென்றும் பின்னிப் பிணைந்திருக்கும் பெரும் கூட்டம், மக்கள் கூட்டம், அதனுடைய அங்கீகாரமே எனக்கு இப்போதும், எப்போதும் உண்டு!

தொழிலாளியாய், விவசாயியாய், விவசாயத் தொழிலாளியாய், பெண்களாய், மாணவராய், இளைஞராய், கவிஞராய், எழுத்தாளனாய், மருத்துவராய், வழக்கறிஞராய், வணிகராய், ஆசிரியராய், பேராசிரியராய், அரசு பணியாளராய் என அனைத்து மக்களின், கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் மக்களின் இதயங்களில் வீற்றிருக்கும், அவர்களின் அங்கீகாரம் மட்டுமே எங்களுக்கான உண்மையான அங்கீகாரம்.

அது என்றென்றும் – எப்போதும் உண்டு! அதனைப் பறித்திட எவனுக்கும் அதிகாரம் இல்லை! மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# தமிழ்நாடு முழுவதும் அம்பேத்கர் 132வது பிறந்தநாள் விழா







சட்டமேதையும், சமூகப்புரட்சியாளரு மான அண்ணல் அம்பேத்கரின் 132வது பிறந்த நாள் விழா ஏப்.14 அன்று தமிழகம் முழுவதும் கொண்டாடப்பட்டது.

**பாலன் இல்லம்:**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, வட சென்னை, மத்திய சென்னை, தென் சென்னை மாவட்டச் செயலாளர்கள் மற்றும் முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**ஆரல்வாய்மொழி:** சிபிஐ ஆரல்வாய்மொழி நகரகிளை சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. சிபிஐ செயலாளர் வே.அருள்குமார் தலைமை தாங்கினார். த.க.இ.பெ. எஸ்.கே.கங்கா துவக்கவுரை ஆற்றினார். சிபிஐ குமரி மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ், மாவட்ட துணை செயலாளர் ஜி.சுரேஷ் மேசிய தாஸ், ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட தலைவர் எஸ்.அனில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் கருத்துரை வழங்கினார்.

**கோவை:** கோவை மாநகரம் வடகோவை எப்.சி.ஐ. குடோன் வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

த.ஒ.வா.இ. மாவட்ட தலைவர் பி.முருகன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் அ.அசரப் அலி துவக்கவுரையாற்றினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம், மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணைச் செயலாளர் ஜே.ஜேம்ஸ், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.எம்.செல்வராஜ், த.ஒ.வா.இ. மாநிலப் பொருளாளர் கே.சுப்பிரமணியன், மற்றும் சாந்தி சந்திரன், ஆர்.பாலகிருஷ்ணன், ப.பா.ரமணி, ஜி.பி.சக்திவேல், ஜே.கலா, என்.சந்திரன், ஏ.பி.மணிபாரதி உள்ளிட்ட ஏராளமானோர் பங்கெடுத்துக் கொண்டனர்.

கோவை மாவட்டம் இருகூர் பகுதியில் த.ஒ.வா.இ. சார்பாக நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்ச்சிக்கு க.பாலசுப்ரமணியம் தலைமை தாங்கினார். இஸ்கஸ் மாநில பொருளாளர் கோட்டியப்பன், த.ஒ.வா.இ. மாநிலக்குழு உறுப்பினர் பி.சக்திவேல், சிபிஐ இருகூர் நகர செயலாளர் வீராச்சாமி, துணைத் தலைவர் சௌந்தரராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகராட்சி 43 வது வார்டு வெங்கிட்டாபுரம் பூபேஷ் குப்தா நினைவு படிப்பகம் முன்பாக அம்பேத்கர், பி.சி.ஜோசி ஆகியோர் படம் வைத்து பிறந்தநாள் விழா த.ஒ.வா.இ. மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருசோத்தமன், குத்தூசி குருசாமி படிப்பகத்தின் பொறுப்பாளர் ச.கதிரவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகரம், ஆவாரம்பாளையத்தில் அமைப்பின் மாவட்டத் தலைவர் பி.முருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டது.

வீரியம்பாளையத்தில் ஏ.ரவிக்குமார் தலைமையிலும், அன்னூர் செல்லப்பன் பாளையத்தில் செல்வராஜ் தலைமையிலும் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தப்பட்டது.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் சிபிஐ நகர செயலாளர் விஜயன் தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி மாலை அணிவித்தார். ஏஐடியுசி இரவி உள்பட பலர் கலந்து கொண்டனர். விருதுநகர் சத்தியரெட்டிபட்டியில் தஒவாஇ மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார் மாலை அணிவித்தார். சிபிஐ மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், ஒன்றிய செயலாளர் சக்கனன், நகர செயலாளர் முத்துக்குமார், ஒவாஇ மாநில குழு உறுப்பினர் முருகேசன், ஏஐடியுசி பாண்டியன், அலியார், மாதர்சங்க மாரீஸ்வரி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

திருச்சுழி ஒன்றியத்தில் சிபிஐ ஒன்றிய செயலாளர் செல்வம், துணை செயலாளர் ஞானகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இராஜபாளையம் காமராஜ் நகரில் சிபிஐ ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி, தவிதொச வரதராஜன், இளைஞர்மன்ற பகத்சிங் உள்பட பலர் கலந்து கொண்டார்கள்

**இராமேஸ்வரம்:** இராமேஸ்வரம் ஏஐடியூசி அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல் அம்பேத்கர் பற்றி நினைவுரை ஆற்றினார். நிகழ்ச்சியில் பி.ஜீவானந்தம் பி.வடகொரியா ஏ.கே.முனீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி:** கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த பகண்டை கூட்டு சாலையில் உள்ள பேருந்து நிறுத்தம் அருகில் த.ஒ.வா.இ. சார்பில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி கொண்டாடினர்.

த.ஒ.வா.இ. மாவட்ட தலைவர் கோவிந்தராஜ் தலைமையில் இந்திய கம்யூனிஸ்ட் ஒன்றிய செயலாளர் தேவேந்திரன், ஏழுமலை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**மதுரை புறநகர்:** மதுரை தல்லாகுளம் அவுட் போஸ்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் காளிதாஸ், புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், த.ஒ.வா.இ. பொருளாளர் பூமிநாதன், நாகஜோதி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**மதுரை மாநகர்:** மதுரை தல்லாகுளம் அவுட் போஸ்டில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு சிபிஐ மாநகர் மாவட்டச் செயலாளர் முருகன், ராஜலட்சுமி, தாமஸ், சேது, நந்தாசிங், வீரமாகாளி, ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**நாமக்கல்:** திருச்செங்கோடு நரிப்பள்ளம் பகுதியில் த.ஒ.வா.இ. சார்பில் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

சிபிஐமாவட்ட செயலாளர் கே.அன்புமணி, பி.தனசேகரன், சி.ஜெயராமன், பி.கார்த்திக், டி.கே.சுப்பிரமணி, ஆர்.கோபிராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

த.ஒ.வா.இ. சார்பில் நாமக்கல் மாவட்டம் எலச்சிபாளையத்தில் ஒன்றியம் ஒன்றிய செயலாளர் எல்.மாரிமுத்து தலைமையில் உறுதிமொழி எடுக்கப்பட்டது. மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், சிபிஐ மாவட்ட செயலாளர் கே.அன்புமணி, கே.தங்கராசு, எல்லப்பன், ரவி, செங்கோட்டுவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செங்கல்பட்டு:** மதுராந்தகம் தாலுகா, மெய்யூர் அம்பேத்கர் நகரில், அம்பேத்கர் சிலைக்கு சிபிஐ கிளை செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவாராதாஸ் மாலை அணிவித்தார். இளைஞர் மன்ற தலைவர் அய்யனார், சிதண்டி சக்திவேல் சஞ்சை, ஸ்டாலின் உள்ளிட்ட முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

திருப்போரூரில் அம்பேத்கர் முழு உருவச்சிலைக்கு சிபிஐ திருப்போரூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் எம்.பார்த்திபன் தலைமையில், ஏஐடியூசி மாநில செயலாளர் வி.ஆதிமூலம், மாவட்ட செயலாளர் க.ஜெகதீசன், சிபிஐ மாவட்ட குழு உறுப்பினர்கள் இ.முனுசாமி மோ. வெங்கடேசன், மாணவர் பெருமன்ற ஜெ.அஜித்குமார் ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

திருப்போரூர் கரும்பாக்கம் பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு ஜப்சோ மாவட்ட செயலாளர் ம.முருகன் மாலை அணிவித்தார். இதில் பி.அன்பரசு, ம.விநாயகம் மற்றும் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

**தென்காசி:** சிவகிரியில் பி.பாலசுப்பிரமணியன் தலைமையில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மாரியாதை செலுத்தப்பட்டது.

ராஜேந்திரன், குருவே, அருணாசலம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**சிவகங்கை:** சிவகங்கையில் அம்பேத்கருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. இதில் சிபிஐ மாவட்ட செயலாளர் கண்ணகி, மாவட்ட துணைச் செயலாளர் கோபால், நகர செயலாளர் பா.மருது, நகரத் துணைச் செயலாளர் பாண்டி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனை முன் உள்ள அம்பேத்கர் சிலைக்கு வி.தொ.ச. மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் மாலை அணிவித்தார். ஜி.மாதையன், ஜி.பச்சாகவுண்டர், என்.முருகேசன், வெ.பை.மாதையன், எல்.சி.கிருஷ்ணன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்,

நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகம் கடைவீதியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு அலமேலு எத்துராஜ் தலைமை தலைமை தாங்கினார்.

**திண்டுக்கல்:** வேடசந்தூரில் அம்பேத்கர் சிலைக்கு சிபிஐ மாவட்டச் செயலாளர் ஏ.பி.மணிகண்டன் மாலை அணிவித்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.சந்திரசேகரன் தலைமை வகித்தார்.

**அரியலூர்:** அரியலூரில் நகராட்சி ஏஐடியுசி சுகாதார தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.தண்டபாணி அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். நகராட்சி ரெ.நல்லுசாமி, பாரதிதாசன் உட்பட 50க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம்:** ஆலந்தூர் தொகுதியில் சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் ஜா.பூபாலன் தலைமையில் மாலை அணிவித்து வீர வணக்கம் செலுத்தப்பட்டது.

சிபிஐ காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர், ப.கார்த்திக், சிபிஐ பல்லாவரம் கிளை செயலாளர் கே.ரவி, எம்.எத்திராசன் உள்ளிட்ட ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் கண்டோன்மெண்ட் அலுவலகம் முன்பு நடைபெற்ற விழாவிற்கு கண்டோன்மெண்ட் தொழிற்சங்க முன்னாள் செயலாளர் ஆர்.மனோகர் தலைமை வகித்தார்.

ஏஐடியுசி செங்கல்பட்டு மாவட்ட செயலாளர், ஜகாங்கீர், ஜா.பூபாலன் எக்ஸ். வி.பி., சி.பி. ஆகியோர் உரையாற்றினர்.

**தஞ்சாவூர்:** கட்சி அலுவலகத்தில் மாநகரச் செயலாளர் பிரபாகர் தலைமையில், மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி அம்பேத்கர் படத்திற்கு மாலை அணிவித்தார். நிகழ்வில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சி.சந்திரகுமார், மூத்த தலைவர் ஜி கிருஷ்ணன், நிர்வாகிகள் கலியமூர்த்தி, சேவையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திருவள்ளூர்:** செங்குன்றம் பேருந்து நிலையத்தில் உள்ள அண்ணல் அம்பேத்கர் சிலைக்கு, சிறுகடை வியாபாரி சங்கத் தலைவர் ஏ.ஆதாம் தலைமையில், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

வி.தொ.ச. திருவள்ளூர் மாவட்ட துணைத்தலைவர் கே.போஸ், எம்.பி.குமார், ஆர்.பஞ்சநாதன், மதி.யோவான் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

**ஈரோடு:** பவானி பெரியார் நகரில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பு, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி முடியரசு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர்கள் த.லெனின், டி.ஏ.மாதேஸ்வரன், ப.மா. பாலமுருகன் உள்ளிட்டோர் உரையாற்றினர். பவானி நகரமன்ற துணை தலைவர் சி.மணி, கட்சியின் மாவட்டக்குழு உறுப்பினர்கள் எம்.தங்கராஜ், தி.கண்ணன், நகர துணை செயலாளர் எம்.ஆர்.சுரேஷ்குமார், நகர பொருளாளர் என்.விஸ்வநாதன், எஸ்.தாமோதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வடசென்னை:** வடசென்னை மாவட்டம், 46வதுவட்டக்கிளைகள்சார்பில் வியாசர்பாடி மகசின்புரம் பகுதியில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.வசந்தகுமார் மாலை அணிவித்தார். மாநிலக்குழு உறுப்பினர் லி.உதயகுமார் அம்பேத்கர் புகழ்குறித்து பேசினார்.

பின்னர் அமரர் ஏ.எஸ்.கே.நினைவு மன்றத்தில் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆ.சுப்பிரமணி, த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் இரா.மோ.சந்தோஷ்குமார், பொருளாளர் சு.பாஸ்கர் மற்றும் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# புல்வாமா தீவிரவாத தாக்குதல்: ஒன்றிய பாஜக அரசே காரணம்!



மணிமாறன்

## அம்பலப்படுத்துகிறார் முன்னாள் ஆளுநர்

**சி.ஆர்.பி.எப். படை வீரர்கள் மீது புல்வாமாவில் நடத்தப்பட்ட தாக்குதல் எந்த அளவுக்கு நாட்டு மக்களை உலுக்கியதோ; அதே அளவுக்கு அதன் பின்னணி குறித்து ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் சத்தியபால் மாலிக் தற்போது அளித்திருக்கும் நேர்காணல் உலுக்கியிருக்கிறது.**

2019 பிப்ரவரி 14ஆம் தேதி ஜம்மு – காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா பகுதியில் 2500 சி.ஆர்.பி.எப். வீரர்கள் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் சென்ற பேருந்து மீது வெடிபொருட்கள் நிரப்பிய மாருதி காரை தற்கொலைப் படைத் தீவிரவாதி மோதச் செய்தான். இதில் 40 மத்திய படை வீரர்கள் பலியாகினர். இந்தத் தாக்குதல் நாட்டு மக்களை உலுக்கியது. மக்களின் மனதில் கொதிப்பை ஏற்படுத்தியது.


### துல்லிய தாக்குதல்

அடுத்த சில நாட்களில், பிரதமர் நரேந்திர மோடியும், நடுவண் அமைச்சர்களும், புல்வாமாவில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்கு மறக்க முடியாத பாடம் கற்பிக்கப்படும் என்பது போன்ற கருத்துக்களை தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து 2019 பிப்ரவரி 26 அன்று பாகிஸ்தானில் உள்ள பாலாகோட் தீவிரவாதிகளின் முகாம் மீது இந்திய விமானப்படை துல்லியத் தாக்குதலை நடத்தியது. தேசத்தை காக்க எந்த எல்லைக்கும் செல்வோம் என பாஜக பரப்புரையை முடுக்கி விட்டது.

அதே நேரத்தில், சி.ஆர்.பி.எப். படை வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பல்வேறு ஐயங்கள் எழுப்பப்பட்டன. பாதுகாப்பு குறைபாடு இருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. அவர்கள் எல்லாம் ''தேசபக்தி இல்லாதவர்கள்'' என பாஜகவினர் சேற்றை வாரி இறைத்தனர். புல்வாமா தாக்குதலை வைத்து மேற்கொண்ட தேசபக்தி பரப்புரை 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற உதவியது.

இந்நிலையில், பா.ஜ.க.வின் தேசபக்தி பரப்புரையை நீர்க்குமிழிகளை உடைப்பது போல், ஜம்மு காஷ்மீர் மாநில முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் அம்பலப்படுத்தி உள்ளார். 'தி வயர்' இணைய இதழுக்கு அவர் நேர்காணல் கொடுத்துள்ளார்.



''சி.ஆர்.பி.எப். தமது வீரர்களை அழைத்துச் செல்ல உள்துறை அமைச்சகத்திடம் விமானங்களைக் கேட்டது. ஆனால் விமானங்களை வழங்க உள்துறை அமைச்சகம் மறுத்துவிட்டது. இதனால் சி.ஆர்.பி.எப். வீரர்கள் சாலை வழியாக அழைத்துச் செல்லப்பட்டனர். அப்பொழுது நடந்த தீவிரவாதத் தாக்குதலில் 40 வீரர்கள் பலியாகினர்.

### வாயை மூடிக் கொண்டு இருங்கள்

இதுகுறித்து பிரதமரிடம் பேசும் போது, ''நம்மிடம் உள்ள தவறு காரணமாகவே புல்வாமா தாக்குதல் நடந்தது என்று கூறினேன். விமானங்களைத் தந்திருந்தால் படைவீரர்களின் உயிரைக் காப்பாற்றி இருக்கலாம் என்றும் அவரிடம் தெரிவித்தேன்.

அவர் இதனை வெளியில் சொல்ல வேண்டாம் என்றும் வாயை மூடிக் கொண்டு இருக்குமாறும் கூறிவிட்டார். பிரதமர் மட்டுமல்ல, பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் இது பற்றி எதுவும் வெளியில் சொல்ல வேண்டாம் என்று கூறினார்.''

அவர்கள் இதனைக் கையாண்ட விதம், படை வீரர்கள் தாக்கப்பட்ட நிகழ்வில் எங்கே தவறு நடந்தது என்று பார்ப்பதைவிட, இதனை பாகிஸ்தானுக்கு எதிராக திசைதிருப்பி விடுவது என முடிவெடுத்துவிட்டதாகவே இருந்தது.

சி.ஆர்.பி.எப். படை வீரர்கள் சென்ற பாதையில் 8 முதல் 9 சந்திப்புகள் இருந்தன. ஒரு சாலை சந்திப்பில் கூட பாதுகாப்புக்காக ஆட்கள் போடப்படவில்லை. கண்காணிப்பும் இல்லை. இது சி.ஆர்.பி.எப். நிர்வாகத்தின் தவறு. இந்தப் பலவீனத்தையும் சம்பந்தப்பட்டவர்களிடம் எடுத்துச் சொன்னேன்.

### அமைச்சரின் நிர்வாகக் கோளாறு

புல்வாமா தாக்குதலில் 300 கிலோ வெடிபொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. படை வீரர்கள் சென்ற ஊர்தி மீது மோதிய கார் முழுவதும் வெடிபொருட்கள் நிரப்பப்பட்டிருந்தன. இந்த அளவுக்கு வெடிபொருட்கள் இங்கே கிடைப்பது சாத்தியமல்ல. பாகிஸ்தான் இந்த வெடிபொருள்களை ஏற்பாடு செய்து அனுப்பியது.

ஆனால் நமது திறமையின்மையும் அலட்சியமும் தான் அந்த வெடிபொருட்கள் வெடித்து உயிர் பலி ஏற்படக் காரணம். வெடி பொருட்கள் நிரப்பப்பட்ட கார் 10 நாட்களாக அந்தப் பகுதியில் சுற்றி இருக்கிறது. யாரும் எங்கேயும் அதனை கண்டுபிடிக்கவில்லை; தடுத்து நிறுத்தவில்லை. இது உள்துறை அமைச்சகம் மற்றும் சி.ஆர்.பி.எப். நிர்வாகத்தின் தவறு. நமது சிஸ்டத்தின் தவறு. அரசுக்கு முழு விவரங்களும் தெரியும். ஆனால் மறைப்பது என அரசு முடிவு செய்து விட்டால் எப்படி உண்மை வெளிவரும்?'' இப்படி சத்யபால் மாலிக் போட்டுடைத்துள்ளார்.

அரசையோ; அரசு நிர்வாகத்தையோ, அதன் குறைபாடுகளையோ விமர்சிப்பது தேசத்துக்கு எதிரானது, தேசபக்தி அற்ற செயல் என பாடம் படித்து வரும் பாசிஸ்டுகள், தங்களின் தவறுகள் அம்பலமாகும் போதும் தேசப் பாதுகாப்பு என்பதன் பின்னால் ஒளிந்து கொள்கின்றனர்.

### விளக்கம் அளிக்குமா?

ஆர்.எஸ்.எஸ். – பா.ஜ.க. தேசபக்த நாடக கம்பெனியை சத்தியபால் மாலிக் அம்பலப்படுத்தி இருக்கிறார். இனிமேலாவது பிரதமர் மோடியும் ஆளும் பா.ஜ.க.வும் மௌனத்தை கலைக்குமா? விளக்கம் அளிக்குமா?

சி.ஆர்.பி.எப். வீரர்கள் 2,500 பேர் விமானத்தில் செல்ல ஏன் அனுமதிக்கப்படவில்லை?

தீவிரவாதத் தாக்குதல் குறித்த உளவுத்துறையின் அறிக்கைகள் ஏன் புறக்கணிக்கப்பட்டன?

தீவிரவாதிகள் 300 கிலோ வெடி மருந்துகளை எங்கிருந்து வாங்கினர்?

பாதுகாப்பு மிகுந்த புல்வாமா அனந்நாக் அவந்திபோரா வழியாக வெடி மருந்தை கடத்த முடிந்தது எப்படி?

இந்தக் கேள்விகளுக்கு பிரதமர் மோடியும் ஒன்றிய அரசும் பதிலளிக்க வேண்டும் என நாடே எதிர்பார்க்கிறது. வழக்கம் போல வாய்மூடியாக இருக்கக் கூடாது.

**கேள்வி : பிரதமரை பற்றி உங்கள் மதிப்பீடு என்ன?**

சத்யபால் மாலிக் : பிரதமர் குறித்து உலகத்தில் உள்ள பலருக்கும் இருக்கும் மதிப்பீடு எனக்கு இல்லை. அந்தப் பதவிக்குரிய விவரங்களும் அறிவும் அவரிடம் போதுமானதாக இல்லை. அவர் முழுமையான விவரங்கள் கிடைக்கப்பெறாதவராக உள்ளார்.



---

# இந்துக்களுக்காக தனி மாவட்டமா? இந்து அமைப்பு மீது டில்லி காவல்துறை வழக்கு

டெல்லியின் வடகிழக்குப் பகுதியில் கடந்த 9.4.2023 அன்று இந்து தேசியப் பஞ்சாயத்து என்ற பெயரில் கூட்டம் நடைபெற்றது. இதை ஜெய் பகவான் கோயல் தலைமையிலான இந்து ஐக்கிய முன்னணி அமைப்பு நடத்தியது.

பாஜகவின் முன்னாள் மத்திய இணை அமைச்சர் சத்யநாராயண ஜட்டியா, வடக்கு டெல்லி முன்னாள் மேயர் அவ்தார்சிங் உள்ளிட்டோரும் இதில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் டெல்லியின் வடகிழக்கு மாவட்டத்தை முழுமையாக இந்துக்கள் கொண்டதாக மாற்ற வேண்டும் என உறுதிமொழி எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக அம்மாவட்டத்தில் குடியிருப்புகள் உள்ளிட்ட சொத்துகள் வைத்துள்ள இந்துக்கள் அவற்றை முஸ்லிம்களுக்கு விற்பனை செய்யக் கூடாது, வீடுகள் மற்றும் கடைகளை இந்து அல்லாதவர்களுக்கு வாடகைக்கு விடக் கூடாது என அறிவுறுத்தப்பட்டது. இந்த வகையில், வடகிழக்கு மாவட்டத்தை இந்துக்களுக்கான நாட்டின் முதல் மாவட்டமாக மாற்ற இருப்பதாக அதன் தலைவர் கோயல் அறிவித்தார்.

அக்கூட்டத்தில் கோயல் பேசுகையில், ''இம்மாவட்டத்தின் ஒருபகுதியை 'மினி பாகிஸ்தான்' ஆக மாற்றும் முயற்சி நடைபெறுகிறது. இதை முறியடித்து நாட்டின் முதல் இந்துக்களுக்கான மாவட்டமாக இதை நாம் மாற்றுவோம். பிறகு மெல்ல, இந்தியா முழுவதையும் இந்து நாடாக மாற்றுவோம்'' என தெரிவித்துள்ளார்.

இதனால் அந்த பஞ்சாயத்து மீதான சர்ச்சைகள் மறுநாள் வெளியில் பரவி டெல்லி காவல்துறை நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளது. முதல்கட்டமாக அந்த பஞ்சாயத்திற்கு முன் அனுமதி பெறவில்லை என டெல்லி காவல்துறை வழக்கு பதிவு செய்துள்ளது. இவ்வழக்கில் கூட்டத்தை நடத்திய ஜெய் பகவான் கோயல் பெயரும், கூட்டத்தில் பங்கேற்ற பாஜகவினர் உள்ளிட்டோரின் பெயர்களும் பதிவாகி உள்ளது. இந்த வழக்கில் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

---

## வினாடி - வினா

11. என்.சி.இ.ஆர்.டி. (தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கழகம்) வெளியிட்டுள்ள வரலாற்றுப் பாடநூலில் இருந்து நீக்கப்பட்ட இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரின் பெயர் என்ன?
2. ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்புத் தகுதி வழங்கிய, ஒன்றிய பாஜக அரசால் நீக்கப்பட்ட அரசியல் சட்டப் பிரிவு எது?
3. உலக அளவில் முதல் மே தினம் எந்த ஆண்டு, எங்கு கொண்டாடப்பட்டது?
4. 1985 ஆம் ஆண்டு, மெரினா கடற்கரையில் மீனவர்கள் பலரைப் பலி வாங்கிய துப்பாக்கிச் சூடு நடந்தது யாருடைய ஆட்சியில்?
5. உலக நாடுகளை மிரள வைத்த கொரோனா தொற்று பரவுவதற்கு காரணமான வைரஸ் பெயர் என்ன?
6. ஜாலியன் வாலாபாக் படுகொலை எந்த ஆண்டு நடைபெற்றது?

– விடைகளை 10 ஆம் பக்கத்தில் பார்க்கவும்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியவற்றின் மண்டல, மாவட்ட, மாநில, அகில இந்திய செயலாளர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான கூட்டம் முக்கிய அரசியல் சூழலில் ஹைதராபாத்தில் ஏப்ரல் 9 அன்று நடைபெற்றது.**

# ஹைதராபாத்தில் இரு கம்யூ



## சிவப்புக் கொடிகளே ஒன்றுபடுங்கள்!

**டி.ராஜா முழக்கம்**

கூட்டம் என்னவோ மதியம் 12 மணிக்கு துவங்குவதாகத்தான் இருந்தது. ஆனால், மண்டலம், தொகுதிகள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிற மாநில தலைவர்கள் ஒரு மணி நேரத்திற்கு முன்பே கூடிவிட்டனர்.

சிபிஐ மாநில செயற்குழு உறுப்பினர் இ.டி. நரசிம்மா வரவேற்றார். சிபிஎம் அப்பாஸ் நன்றி கூறினார். கூட்டத்தில் சிபிஐ தேசிய செயலாளர் கே.ராமகிருஷ்ணா பாண்டா, தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சாடா வெங்கட ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர். மேடையில் சிபிஐ மற்றும் சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர்களும், மற்றும் தேசிய கவுன்சில் உறுப்பினர்களும் இருந்தனர்.

பி.எஸ்.ராம்பாபு தயாரித்த "சிவப்புக் கொடிகள் ஒன்றுபடுங்கள்" என்ற குறுந்தகட்டை டி.ராஜா, சீத்தாராம் யெச்சூரி இருவரும் வெளியிட்டனர். வகுப்புவாதத்திற்கு எதிராக முற்போக்கு எழுத்தாளர் சங்க எழுத்தாளர்கள் மற்றும் கவிஞர்களால் எழுதப்பட்ட புத்தகத்தை சிபிஐ தேசிய செயலாளர் டாக்டர் கே. நாராயணா, சிபிஎம் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் பி.வி.ராகவுலு ஆகியோர் வெளியிட்டனர்.

இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தொண்டர்கள் மத்தியில் மிகுந்த உற்சாகம் காணப்பட்டது. இப்டா மற்றும் பிரஜா நாட்டிய மண்டலி குழுவினர் புரட்சிகர பாடல்களால் பார்வையாளர்களை கவர்ந்தனர்.

கூட்டத்தில் பங்கேற்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பொதுச் செயலாளர் சீதாராம் எச்சூரி ஆகியோர் பேசியதன் சுருக்கம் வருமாறு;

"அனைத்து துறைகளிலும் நெருக்கடியை உருவாக்கி, அரசியல் சாசனத்தை, ஜனநாயகத்தை, மதச்சார்பின்மையை, கூட்டாட்சி உணர்வை மொத்தமாக சீர்குலைத்து வரும் பிஜேபியை நாம் ஒன்றுபட்டு முறியடிக்க முடியும். இந்த உண்மையை, மதச்சார்பற்ற, மாநில மற்றும் மையவாத கட்சிகள் உணர வேண்டும். ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே தேர்தல், ஒரே மொழி என்று பாஜகவும் – ஆர்எஸ்எஸ்ஸும் முன்பெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால், இப்போது "ஒரே நாடு, ஒரே கட்சி, ஒரே தலைவர், அதுதான் மோடி" என்று அவர்களது முழக்கம் மாறி வருகிறது. ஆர்எஸ்எஸ் சித்தாந்தம், பாசிச சித்தாந்தம். நாட்டை சீர்குலைக்கும் கொள்கை அது.

அவர்களின் இலக்கு இந்தியாவை இந்துராஷ்ட்ரமாக, ஒற்றைக் கலாச்சாரம் கொண்டதாக மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய காலப் பண்பாட்டு மறுமலர்ச்சியை முன்னெடுப்பதாக மாற்றுவதே ஆகும். இந்து ராஷ்டிரமாக இந்தியா மாற்றப்பட்டால், அது மிகவும் ஆபத்தான ஒன்றாக இருக்கும் என்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் நீண்ட காலத்திற்கு முன்பே கூறியிருக்கிறார். ஆனால் பிஜேபி ஆர்எஸ்எஸ், இந்தியாவை இந்து ராஷ்டிரமாக மாற்றுவதற்கு இரவு பகலாக வேலை செய்து கொண்டிருக்கின்றன.

இந்தியா மாநிலங்களின் ஒன்றியமாக, கூட்டாட்சி தன்மையைக் கொண்டு இயங்குகிறது. ஆனால் பாஜக, ஆளுநர்களை தங்கள் அரசியல் ஆயுதங்களாகப் பயன்படுத்தி ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசாங்கங்களை சீர்குலைத்து வருகிறது.

கம்யூனிஸக் கோட்பாடு மிகவும் ஆபத்தானது, அது தீ போலப் பரவக்கூடியது என்று மோடி அடிக்கடி கூறி வருகிறார். சர்வ நிச்சயமாக, மோடிக்கும் பாஜகவுக்கும் இது மிகவும் ஆபத்தானதுதான். ஆனால் செல்வத்தை உருவாக்குபவர்களான தொழிலாளர்கள், விவசாயிகள், பிற உழைக்கும் பிரிவுகள் மற்றும் அறிவுஜீவிகளுக்கு கம்யூனிசக் கோட்பாடு மிகவும் பிடித்தமானது.

கம்யூனிஸ்ட் கட்சியும் ஆர்.எஸ்.எஸ்.ஸும் ஒரே ஆண்டில் நிறுவப்பட்டவை. ஆனால் சுதந்திரப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். ஒருபோதும் பங்கேற்றதில்லை. ஆனால், கம்யூனிஸ்டுகள் காலனித்துவத்துக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டங்களில் அளப்பரிய தியாகங்களைச் செய்துள்ளனர். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வை, வகுப்புவாதத்தை தோற்கடிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையை காலம் கம்யூனிஸ்டுகளின் தோள்களில் சுமத்தி இருக்கிறது.

ஆனால், அது அனைத்து முற்போக்கு, மதச்சார்பற்ற சக்திகளும், கம்யூனிஸ்டுகளும் ஒன்றிணைந்து, வலதுசாரி தீவிர வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக போராடுகிற ஒற்றுமையை உருவாக்குவதன் மூலமாகவே சாத்தியமாகும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவைகளில், கம்யூனிஸ்டுகளின் பலத்தை அதிகரித்தால்தான் நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைக்க முடியும். சிபிஐ, சிபிஎம் கட்சிகள் இன்னும் மேலதிக ஒற்றுமையோடும் நெருங்கி நின்றும் செயல்பட வேண்டும். இடது ஒற்றுமை ஏற்பட, பரஸ்பர நம்பிக்கையும், கூடுதல் ஒருங்கிணைப்பும் அவசியம்.

சிவப்புக் கொடிகள் இரண்டு அல்ல, இரண்டுமே ஒன்றுதான் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். 1989ம் ஆண்டு கல்கத்தா மாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய பொதுச்செயலாளர் தோழர் சி.ராஜேஸ்வர ராவ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் மீண்டும் இணைக்க வேண்டும் என்று முன்மொழிந்தார்; அதனை மாநாடு ஒருமனதாக அங்கீகரித்தது.

### தெலுங்கானா முயற்சி ஒட்டுமொத்த தேசத்துக்கும் உத்வேகம்:

1992ல் சிபிஐயின் பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திரஜித் குப்தாவும், சிபிஎம் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளராக இருந்த ஹரிகிஷன் சிங் சுர்ஜித் இருவரும் ஒற்றுமையாக செயல்படத் துவங்கினர். தேசநலன், மற்றும் தொழிலாள வர்க்க நலன்களுக்காக, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களை உருவாக்குமாறு அவர்கள் அனைத்து மாநிலக் குழுக்களுக்கும் கூட்டுச் சுற்றறிக்கை அனுப்பினர். அதன்படி உருவாக்கப்பட்ட கூட்டுக் குழுக்களின் செயல்பாட்டில் அதிகம் முன்னேற்றம் இல்லை.

நானும் சீத்தாராம் யெச்சூரியும் அப்போது அந்த தலைவர்களோடு இணைந்து பணியாற்றினோம். இப்போது இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் பொதுச் செயலாளர்களாகி விட்டோம். அதிக ஒருங்கிணைப்புடன் இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றுமைக்காக நாங்கள் எங்களுடைய முழு பலத்துடன் செயல்பட்டு வருகிறோம். தெலுங்கானா

1 ம் பக்கத் தொடர்ச்சி

### பொதுத்துறை அதானிக்கு காவு

அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு ரூ.82 க்கும் மேல் எப்போதும் இல்லாத அளவிற்கு தொடர்ந்து சரிந்து வருகிறது. அந்நிய செலவாணி இருப்பு மற்றும் தங்க கையிருப்புகள் கூர்மையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் இந்தியாவின் வெளிநாட்டு கையிருப்பு 564 பில்லியன் டாலர்களாக வரலாறு காணாத அளவு சரிந்துள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களின் பெரும் தொகைகள் அதானி குழும நிறுவனத்திற்கு அள்ளி வழங்கப்பட்டுள்ள உண்மையை ஹின்டன்பர்க் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது. பிரதமர் தனிப்பட்ட ஆர்வத்துடன் அதானி நிறுவனத்தின் வர்த்தக வளர்ச்சிக்கு பல்வேறு நாடுகளுடன் தொடர்பு கொண்டதும், தன்னுடன் கௌதம் அதானியை எப்போதும் அழைத்துச் சென்றதும் உலகம் முழுதும் அப்பட்டமாக தெரிகிறது.

### வகுப்புவாத முன்னேற்றம்!

எல்லாத் துறைகளிலும் தோல்வி அடைந்த ஒன்றிய அரசு நமது மதசார்பற்ற அரசியலமைப்பை முற்றிலுமாக சிதைக்க முற்பட்டுள்ளது. மோடி தலைமையிலான பாஜக அரசு இந்தியாவை ஒரு பெரும்பான்மை வகுப்புவாத இந்து ராஷ்டிரம் ஆக மாற்றும் திசையில் வேகமாக முன்னேறி வருகிறது. ராமநவமி தினத்தன்று பல்வேறு இடங்களில் இக்கும்பல் நடத்திய வன்முறை வெறியாட்டத்தை கூச்சமில்லாமல் மத நடவடிக்கை என்று பிரச்சாரம் செய்கிறது.

கார்பரேட்டுகளின் நலன்களை பாதுகாப்பது தேசத்தை அழிவு பாதைக்கு இட்டு செல்லும் மக்கள் விரோத, தேச விரோத பாசிச அரசை அகற்றுவதே இந்த மே நாள் சபதமாகட்டும்.

### தமிழகம்

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சியில் 60% பங்களிக்கின்ற மொத்த தொழிலாளர்களில் 94% தொழிலாளர்களை கொண்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. மாநில நல வாரியங்கள் புரட்டி போடப்படுகின்றன. நல வரி வசூல் அதிகாரத்தையும் நிதி பலன் வழங்கும் திட்டங்களையும் ஒன்றிய அரசே எடுத்துக் கொள்கின்றன. இதன் விளைவாக பல்வேறு மாநிலங்களில் கட்டிட தொழிலாளர் நல வாரிய நிதியாக வசூலிக்கப்பட்டு செலவிடப்படாமல் 38 ஆயிரம் கோடி ஒன்றிய அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நிலவும் வேலையின்மை பிரச்சனையில் இருந்து தற்காத்துக் கொள்ள பல்வேறு மாநிலங்களில் இருந்து புலம்பெயர் தொழிலாளர்கள் தமிழகத்திற்கு வந்து பணி புரிகின்றனர். அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதாக பொய்யான வீடியோக்களை, தனது அரசியல் ஆதாயத்திற்கு பாஜக பயன்படுத்தியதையும் அதன் விளைவாக நாடு முழுவதும் அச்ச உணர்வை உருவாக்கிய கொடூரத்தையும் நாம் நன்கு அறிவோம்.

### வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகிறது

பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்நாள் முழுக்க வேலை பார்த்தும் நிரந்தரம் செய்யப்படாமல் காண்ட்ராக்ட் என்ற பெயரிலும் அவுட்சோர்சிங் என்ற பெயரிலும் தின கூலிகளாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் போக்குவரத்து, மின்சாரம், சிவில் சப்ளை போன்ற கேந்திரமான நிறுவனங்களில் ஒப்பந்த முறை மற்றும் அவுட்சோர்சிங் போன்ற பெயரில் நிரந்தரத்தன்மை வாய்ந்த பணிகளுக்கு வேட்டு வைக்கப்படுகிறது. மாநகராட்சி, நகராட்சி உள்ளாட்சி, தொழிலாளர் துறை போன்றவற்றில் கீழ் நிலையில் பணிபுரியும் சி அன்ட் டி பிரிவு ஊழியர்கள் ஓய்வு பெற்றால் அந்த இடத்தில் புதிய ஆட்களை நியமிப்பதற்கு பதிலாக அவுட்சோர்சிங் என அரசாணை வெளியிடப்பட்டது என்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று உள்ளது.

உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்களில் சங்கம் அமைக்கும் உரிமை, கூட்டு பேர உரிமை மறுக்கப்படுகிறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு முன்மொழிந்துள்ள 87 மற்றும் 89 விதிகள் முழுமையாக கடைபிடிக்கப்படவில்லை. ஆளும் வர்க்கமும் நிறுவனங்களுக்கு ஆதரவாகவே செயல்படுகிறது. மீறி சங்கம் அமைத்தால் தொழிலாளர்கள் பணி நீக்கம், இடமாற்றம் பொய் வழக்கு என பழிவாங்கப்படுகிறார்கள். பேச்சு வார்த்தைக்கு வர மறுக்கிறார்கள், தலையிட வேண்டிய தொழிலாளர் துறையோ செய்வதறியாமல் திகைத்து நிற்கிறது.

தகவல் தொடர்பு துறையில் தற்போது உலக மந்த நிலையை காரணம்காட்டி தமிழகத்தில் இளம் தொழிலாளர்களை கொத்துக் கொத்தாக பணி நீக்கம் செய்யும் நடவடிக்கைகள் வேகப்படுத்தப்பட்டுள்ளது. இத்தொழிலாளர்களை வெளியேற்ற எந்தவிதமான சட்டவிதிகளையும் நிறுவனங்கள் கடைபிடிப்பதில்லை.

# னிஸ்ட் கட்சிகளின் சங்கமம்



மாநிலத்தில் நடைபெறும் சிபிஐ – சிபிஎம்–ன் அனைத்து மாவட்ட, மண்டலப் பொறுப்பாளர்களின் தற்போதைய இந்தக் கூட்டம் முழு நாட்டிற்கும் உத்வேகம் அளிக்கிறது. விஜயவாடாவில் அண்மையில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாட்டில், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் மீண்டும் இணைய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### ஜேபிசியை கண்டு பாஜக ஏன் பயப்படுகிறது?

அதானி விவகாரத்தை நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு (ஜேபிசி) அனுப்ப வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தாலும், ஆளும் பிஜேபி அதை அனுமதிக்கவில்லை. இதற்காக நாடாளுமன்றத்தையே நடத்த விடாமல் சீர்குலைத்தனர்.

ஜேபிசி யில் கூட பிஜேபிக்கு பெரும்பான்மைதான் இருக்கும். ஆனால் அவர்கள் ஏன் ஜேபிசிக்கு பயப்படுகிறார்கள்? நமது நாடு நல்வாழ்வு அரசு என்று அரசியலமைப்புச் சட்டம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. ஆனால் பாஜக அரசு அதனை உருத்தெரியாமல் சீர்க்குலைக்க எல்லா முயற்சிகளையும் செய்கிறது'' என்று டி.ராஜா மத்திய அரசை விமர்சித்தார்.



## மோடியை தோற்கடிக்க முடியாது என்பது உண்மையல்ல

**சீதாராம் எச்சூரி முழக்கம்**

“மோடி தலைமையிலான பாஜக அரசை ஆட்சிலிருந்து அகற்றாமல், நமது அரசியலமைப்பை காப்பாற்ற முடியாது. ஒருபுறம் ஜனநாயகத்தையும், மதச்சார்பின்மையையும் பாதுகாக்கும் நமது போராட்டத்தை தொடரும் அதே வேளையில், மறுபுறம் மதச்சார்பற்ற மற்றும் முற்போக்கு சக்திகள் ஒன்றிணைந்து பாஜகவை தோற்கடிப்பதற்கான அழுத்தத்தை உருவாக்க வேண்டும்.

அந்தப் பொறுப்பு இடதுசாரி கட்சிகள் மீது தான் அதிகம் உள்ளது. மோடி அலை வீசுவதாக நடக்கும் பிரச்சாரம் உண்மையல்ல. மோடியின் கைகளில்தான் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் உள்ளன. மோடியை யாராலும் தோற்கடிக்க முடியாது என அவை ஓயாது பிரச்சாரம் செய்கின்றன.

திரிபுரா, மேகாலயா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் சமீபத்தில் தேர்தல் நடந்தது. மொத்தம் 180 இடங்கள் உள்ளன. இதில் பாஜக 46 இடங்களில் வெற்றி பெற்று 58 இடங்களில் டெபாசிட் இழந்தது. நாகாலாந்தில் வெறும் இரண்டு இடங்களையும், திரிபுராவில் பெரும்பான்மை பெறுவதற்கான எண்ணிக்கையய விட இரண்டே இடங்களைத்தான் கூடுதலாக வெல்ல முடிந்தது. தன்வசமிருந்த 17 இடங்களில் தோல்வியடைந்தது.

இதற்கு முன் இமாச்சல பிரதேசத்தில் காங்கிரஸிடம் தோல்வியடைந்தது. டெல்லி மாநகராட்சி தேர்தலில் கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த பாஜகவை ஆம் ஆத்மி கட்சி தோற்கடித்தது. குஜராத்தில் மட்டுமே பாஜக மீண்டும் வெற்றிபெற முடியும்.

இந்த உண்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டும். இந்த பணியை சிபிஐ, சிபிஎம் கட்சிகளால் மட்டுமே செய்ய முடியும்.

கடந்த பத்து ஆண்டுகளில், சிபிஐ மற்றும் சிபிஎம் ஆகிய இரு கட்சிகளுக்கும் இடையே கீழே இருந்து ஒற்றுமை தோன்றுவது இதுவே முதல் முறை. புகழ்பெற்ற வீர தெலுங்கானா ஆயுதப் போராட்டத்தின் மரபு இருக்கும் தெலுங்கானா போன்ற மாநிலத்தில், கடந்த காலப் பெருமை புத்துயிர் பெற வேண்டுமானால், கம்யூனிஸ்டுகளிடையே ஒற்றுமை அவசியம். அது தவிர்க்க முடியாதது.

சிபிஐ மற்றும் சிபிஎம் தெலுங்கானா பிரிவுகள் ஒரு புதிய வழியைக் கண்டுபிடிக்க முடியும். இரு மாநிலத் தலைவர்களும் இந்த பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். இந்த முடிவு மத்திய அளவிலும் விவாதிக்கப்படும்.ஒவ்வொரு மாநிலத்திலும் அவர்களின் சொந்த மாநில அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப பாஜகவை தோற்கடிக்க ஒரு வேலைத்திட்டம் வகுக்கப்படும். இந்த விஷயத்தில் இடதுசாரி கட்சிகளுக்கு அதிக பொறுப்பு உள்ளது. தெலுங்கானாவில் இடதுசாரிக் கட்சிகள் இந்த இலக்கை எட்டினால் அது முழு நாட்டிற்கும் உத்வேகமாக இருக்கும்.

மாநிலங்களில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப கட்சிகளை நம்முடன் அழைத்துச் செல்லலாம். தேர்தலுக்குப்பிறகுதான் தேசிய அளவில் முன்னணிகள் அமைக்கப்படும். 1996 மற்றும் 2004 இல் ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆகியவை தேர்தலுக்குப் பிறகுதான் உருவானவை. 2004 இல் இடதுசாரி கட்சிகள் 61 இடங்களை வெல்ல முடிந்தது மற்றும் காங்கிரஸை 57 எம்.பி இடங்களில் தோற்கடிக்க முடிந்தது. இருந்தபோதிலும் ஜனநாயகத்தையும் அரசியலமைப்பையும் காப்பாற்றுவதற்காக, நாம் மன்மோகன் சிங் அரசாங்கத்தை ஆதரித்துள்ளோம்.

பாஜக அரசு அல்லாத மாநிலங்களில், மாநில அரசுகளிடமிருந்து அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்களை மோடி பறித்து வருகிறார். அமலாக்கப்பிரிவு மற்றும் சிபிஐ யைப் பயன்படுத்துவதன் மூலம் பாஜக அல்லாத மாநில அரசாங்கங்களை சீர்குலைத்து வருகிறார். அமலாக்க இயக்குனரகம் 5000 ஆயிரம் வழக்குகளை பதிவு செய்துள்ளது. ஆனால், வெறும் 0.5 சதவீத வழக்குகளில் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர்கள் பொய் வழக்குகள் போட்டு துன்புறுத்தப்படுவதை இது தெளிவாகக் காட்டுகிறது. ஜனநாயகம், மதச்சார்பின்மை, பொருளாதார தன்னம்பிக்கை, சமூக நீதி மற்றும் கூட்டாட்சி உணர்வை மோடி அரசு சீர்குலைத்து வருகிறது. நமது அரசியலமைப்பின் முக்கிய தூண்கள் இவை.

கடந்த ஏழு ஆண்டுகளில் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு மோடி அரசு ரூ.11 லட்சம் கோடி கடன்களை தள்ளுபடி செய்துள்ளது. ஆனால் விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யவில்லை. கோவிட் தொற்றுநோய் காலத்தில், 40 சதவீத சொத்து ஒரு சதவீத நபர்களின் கைகளில் இருந்தது. 50 சதவீத மக்களிடம் 3 சதம் சொத்து மட்டுமே இருந்தது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் விரிவடைகின்றன. வேலையில்லா திண்டாட்டம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வருகிறது. சமையல் எரிவாயு விலை ரூ.400ல் இருந்து ரூ.1100 ஆக உயர்ந்துள்ளது. மக்களின் அதிருப்தியில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் பாஜக வகுப்புவாத பதட்டத்தை உருவாக்கி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ராமநவமி மற்றும் அனுமன் ஜெயந்தியின் போது, மதக்கலவரங்கள் உருவாக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் சில கேள்விகள் கேட்கப்பட்டபோது அவை பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டன. கடந்த நாடாளுமன்றங்கள் எதிலும் நடந்திராத கொடுமை இது'' என்று சீதாராம் எச்சூரி பேசினார்.

**தமிழில்: டி.எம்.மூர்த்தி**

---

### பணிப்பாதுகாப்பு இல்லை

ஆப் மூலமாக பணி புரியும் கீக் ஊழியர்கள் பணி பாதுகாப்பற்ற சூழலில் குறைந்த வருவாயில் பணியாற்றுகிறார்கள். இத்தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தொழிலாளர் சட்டங்கள் இவர்களுக்கு பொருந்தாதாம். இவர்களை தொழிலாளர் சட்டத்திற்குள் கொண்டு வர வேண்டிய தொழிலாளர் துறை இவர்களது முதலாளி யார் என்று தேடுகிறதாம். இக்கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இரண்டு ஆண்டுகளில் 480 நாட்கள் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தர படுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசின் நிரந்தர தகுதி அளித்தல் சட்டம் 1982 கூறுகிறது. கடந்த மானிய கோரிக்கையில் கூட அந்த சட்டப்படி 237 தொழிலாளர்கள் நிரந்தர படுத்த தீர்ப்பளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் நிரந்தர படுத்தப்பட்டார்களா? என்பது பற்றி சட்டமன்றக் கொள்கை குறிப்பில் தகவல் எதுவும் இல்லை.

### மிகக் குறைந்த ஊதியம்

இந்தியாவிலேயே மிக குறைவாக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்று என்று ஆய்வு விவரங்கள் தெரிவிக்கின்றன.

ஒன்றிய அரசின் பொதுத்துறையை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை எதிர்க்கும் அதே வேலையில் தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளில் முனைப்பு காட்டுவது தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கே விரோதமானதாகும்.

தமிழக போக்குவரத்துத்துறைக்கு நெடிய வரலாறு உண்டு இத்துறையை தனியாரிடம் ஒப்படைக்க அதிமுக முயற்சித்தபோது அதை எதிர்த்து நீதிமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் பாதுகாத்தோம். மின்வாரிய தொழிலாளர்களுக்கு ஊதிய ஒப்பந்தம் வேண்டுமென்றால் தனியார்மயத்தை ஏற்க வேண்டும் என நிர்பந்திப்பதும் ஒன்றிய அரசின் தனியார்மய கொள்கைகளுக்கு ஒத்திசையாகவே உள்ளது. மாநில அரசை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களிலும், உள்ளாட்சி மற்றும் இசேவை துறைகளிலும் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கப்படுவதில்லை. இந்த சட்ட மீறல்கள் செய்வதை அதிகாரிகள் பெருமிதமாக கருதுகிறார்கள்.

ஒன்றிய அரசு பெரும் முதலாளிகளுக்கு ஆதரவாகவும் தொழிலாளர்களின் உரிமையை பறிப்பதற்கும் 44 சட்டங்களை சுருக்கி நான்கு சட்டத்தொகுப்பு, வெளியிட்டது. ஒன்றிய ஆளும் கட்சியின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ். உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இதனை எதிர்க்கின்றன.

தமிழ்நாடு அரசு இயல்பாகவே சட்ட தொகுப்புகளை எதிர்க்க வேண்டும். ஆனால் இந்த சட்ட தொகுப்புகளுக்கு வரைவு விதிகளை தமிழ்நாடு அரசு தொழிலாளர் துறை வெளியிட்டது. அந்த விதிகளை உறுதி செய்யாமல் தடுக்க வேண்டும் என்பது தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்துச் சங்கங்களும் ஒரே குரலில் அரசுக்கு எடுத்துரைத்தது.

ஆனால் ஒன்றிய அரசின் தொழிலகப் பாதுகாப்பு, சுகாதாரம், வேலை நிலைமைகள் சட்டத்தொகுப்பு இது வரை அமுல் நடத்தப்படவில்லை என்பதால், அதிலுள்ள வேலை நேரத்தில் மாறுதல் உள்ளிட்ட விசயங்களை முன்னதாகவே செயல்படுத்தும் வகையில் தொழிற்சாலைச் சட்டத்தை திருத்துவதற்கான மசோதா 12.04.2023ல் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

### 8 மணிநேர வேலை உரிமை பறிப்பு

இதன் மூலம் தொழிலாளர்களின் வேலைநேரத்தை எட்டு மணி நேரத்திலிருந்து பணிரெண்டு மணி நேரமாக்கிட, முதலாளிகளின் முப்பது ஆண்டு கால கோரிக்கையை திமுக அரசு நிறைவேற்றியுள்ளது. 75 ஆண்டுகாலம் எந்த அரசும் செய்ய துணியாத தொழிற்சாலை சட்டத்திருத்தத்தை முதலாளிகளுக்கு ஆதரவாக தமிழ்நாடு அரசு செய்து தமிழக உழைப்பாளிகளுக்கு ஊறு விளைவித்துள்ளது.

எனவே ஒன்றிய, மாநில அரசுகளிடமிருந்து தொழிற்சங்க இயக்கத்தின் கூட்டு பேர உரிமை, ஜனநாயக உரிமை, சுதந்திர உரிமைகளை மீட்டெடுப்போம்.

தொழிலாளர், விவசாயிகள், மக்கள் விரோத நடவடிக்கைகளை முறியடிப்போம். ஒன்றிய சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம் என்று இந்த மே நாளில் சபதமேற்போம்.

தொழிலாளர் ஒற்றுமை ஓங்குக!

தொழிற்சங்க ஒற்றுமை ஓங்குக!

மே தினம் நீடூழி வாழ்க!

புரட்சி ஓங்குக!

இவ்வாறு கூட்டறிக்கையில் கூறியுள்ளனர்.

# சாதி வெறி ஆணவக் கொலைகளைத் தடுக்க வலுவான சட்டம் நிறைவேற்ற வேண்டும்

## ◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

“சாதி” வெறி ஆணவக் கொலைகள் தடுக்க வலுவான சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அருகில் உள்ள அருணபதி கிராமத்தை சேர்ந்த தண்டபாணி (50) அவரது மகன் சுபாஷ் (25) சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டதால், அவரையும், அவரது மருமகள் அனுசுயா ஆகியோரையும், தண்டபாணியின் தாயார் கண்ணம்மாள் (70) வீட்டுக்கு வஞ்சகமாக வரவழைத்து, அவர்களிடம் பாசம் காட்டி ஏமாற்றி, அவர்கள் அசந்து தூங்கும் நேரத்தில் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

தண்டபாணியின் கொலை வெறித் தாக்குதலை தடுத்த அவரது தாயாரையும் வெட்டியுள்ளார். இந்த சாதி வெறித் தாக்குதலில் கண்ணம்மாள், சுபாஷ் இருவரும் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துவிட்டனர். மருமகள் அனுசுயா வெட்டுப்பட்ட படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார் என்கிற செய்தி மிகுந்த கவலையளிக்கிறது.

சாதி வேற்றுமைகள் களையவும், தீண்டாமை முறையை தடுக்கவும் சான்றோர்களும், சீர்திருத்த இயக்கத் தலைவர்களும் கடுமையாக போராடி, தமிழ்நாட்டின் சமூக வாழ்வில் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

பகுத்தறிவுக்கு ஒவ்வாத சாதி, மதவெறி கருத்துக்களும், வெறுப்பு அரசியலும் பரப்பப்படுவதால் ஆணவப் படுகொலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. சில நாட்களுக்கு முன்பு கிருஷ்ணகிரியில் காதல் தம்பதிகள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனைத் தொடர்ந்து இல்லறம் ஏற்ற சாதி மறுத்து, தம்பதிகளான இளைஞர், 20 நாளில் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பது சட்டத்தின் ஆட்சிக்கு சவாலாகும்.

மூடப்பழக்க வழக்கங்களை அழித்து, அறிவியல் கண்ணோட்டம் வளர்க்கும் சமூக சீர்திருத்தப் பணிகளுடன், ஆணவப் படுகொலைகளை தடுக்கும் வலுவான தனி சட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு நடப்புக் கூட்டத் தொடரில் நிறைவேற்ற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தமிழ்நாடு முதலமைச்சரை கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# உதகை தாவரவியல் பூங்காவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தொழிலாளி அங்கம்மாள் மரணம்

## ◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

உதகை தாவரவியல் பூங்காவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தொழிலாளி அங்கம்மாள் மரணமடைந்துள்ள செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. இது குறித்து மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளதாவது:

உதகை தாவரவியல் பூங்காவில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த தொழிலாளி அங்கம்மாள் மரணமடைந்துள்ள செய்தி ஆழ்ந்த வேதனை அளிக்கிறது.

அங்கம்மாள் போல் நூற்றுக்கணக்கான பெண் தொழிலாளர்களும், அரசின் தோட்டக்கலைத்துறையிலும், ஆராய்ச்சி பண்ணைகளிலும், தினக்கூலித் தொழிலாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

அரசின் வேளாண்மைதுறையின் கீழ் உள்ள அரசுப் பண்ணைகளிலும், வேளாண் பல்கலைக் கழக ஆராய்ச்சி பண்ணைகள், தோட்டக்கலைத்துறை பிரிவுகளிலும் குறைந்தபட்ச ஊதியம் கூட வழங்கப்படாத அவல நிலை தொடர்கிறது. காலமுறை ஊதியம் மற்றும் பணிப் பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 23ஆம் தேதி முதல் நடந்து வரும் போராட்டத்தில் அரசு காலத்தில் தலையிட்டு பேசித் தீர்வுகண்டிருந்தால். மூத்த தொழிலாளியின் சாவு தடுக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

போராட்டத்தில் அரசின் அணுகுமுறை தொழிலாளர்களிடம் எதிர்மறை கருத்துக்களை உருவாக்கியிருப்பது வேதனையளிக்கிறது.

உதகையில் நடைபெறும் போராட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு, உயிரிழந்த தொழிலாளர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்குவதுடன், தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# அண்ணாமலையின் அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயல்

## ◆ இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



அண்ணாமலையின் அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் கே. அண்ணாமலை தி.மு.க. தலைவர் உள்ளிட்ட கட்சியின் முன்னணி தலைவர்கள் மீது குற்றச்சாட்டு என்ற பெயரில் சொத்து விபரங்களை செய்தியாக வெளியிட்டுள்ளார்.

அண்ணாமலை வெளியிட்டுள்ள செய்திவரும் ஆண்டு (2024) நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில், பாஜகவை ஒன்றிய அரசின் அதிகாரத்தில் இருந்து அகற்ற, எதிர்கட்சிகளை அணிதிரட்டி ஒருங்கிணைத்து வரும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினையும், அவரது கட்சியினரையும் மிரட்டி நிர்பந்திக்கும் முயற்சியின் வெளிப்பாடாகும்.

ஜனநாயகத்தை பாதுகாக்க இந்திய அரசியல் சாசனம் ஏற்படுத்தியுள்ள அமைப்புகளான வருமானவரித் துறை, அமலாக்கத்துறை, மத்தியப் புலனாய்வுத்துறை ஆகியவற்றை ஏவி எதிர்கட்சித் தலைவர்கள் மீது சோதனைகளும், விசாரணைகளும் நடத்தி அவர்களை மோசமானவர்களாக மக்கள் முன் நிறுத்துவது ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வின் வழக்கமாகும்.

கடந்த 2002ஆம் ஆண்டில் குஜராத் மாநிலத்தில் நடந்த முஸ்லிம் இன அழிப்பு பேரழிவு தாக்குதலில், மோடி அரசின் கரம் இருப்பதை ஆதாரத்துடன் வெளிப்படுத்திய பி.பி.சி. நிறுவனத்தின் ஆவணப்படம் தடை செய்யப்பட்டதும், மோடியின் நெஞ்சுக்கு நெருக்கமான நண்பர் அதானியின் குழும நிறுவனங்களின் பங்குச் சந்தை கணக்கியல் மோசடிகளுக்கு துணை போன குற்றச்சாட்டின் மீது, கூட்டு நாடாளுமன்றக்குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தது,

நாடாளுமன்ற நடவடிக்கைகளை முடக்கி அன்றாடம் அமளி, துமளியாக்கி ஜனநாயக நடைமுறைகளை நிராகரித்ததும், தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தகுதி பறிக்கப்பட்டதையும் நாடு ஒருமுகமாக கண்டித்து வருகிறது.

பாஜக ஒன்றிய அரசின் மீது நாடு முழுவதும் எதிர்ப்புகள் வலிமை பெற்று வரும் நிலையில் எதிர்கட்சிகளை ஒருங்கிணைத்து, சமூகநீதி ஜனநாயக கொள்கை அடிப்படையில் பரந்துபட்ட கூட்டணி அமைக்க தி.மு.க. எடுத்து வரும் நடவடிக்கைகள் பா.ஜ.க.விற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதனால், பா.ஜ.க. ஒன்றிய அரசின் அதிகாரத்தை பயன்படுத்தி, அரசியலமைப்பு நிறுவனங்களை கருவிகளாக்கி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தலைமை ஏற்றுள்ள திமுகவை தனிமைப்படுத்த பா.ஜ.க. அண்ணாமலை மூலம் அவதூறு பரப்பும் விஷமத்தனத்தில் ஈடுபட்டிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கண்டிக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க. தேர்தல் ஆதாயம் தேடு மலிவான செயலுக்கு எதிராக மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு சக்திகள் ஒருங்கிணைந்து தீவிரமாக களமிறங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## கட்சி வளர்ச்சி நிதி வழங்கிய தோழர்கள்/மாவட்டங்கள்

| | | |
|---|---|---|
| தஞ்சை வடக்கு மாவட்டம் | – | ரூ.2,33,100 |
| நாகப்பட்டினம் மாவட்டம் | – | ரூ.1,50,000 |
| மயிலாடுதுறை மாவட்டம் | – | ரூ.1,00,000 |
| மத்திய சென்னை மாவட்டம் | – | ரூ.50,000 |
| தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் | – | ரூ.25000 |
| கன்னியாகுமரி மாவட்டம் | – | ரூ.5000 |
| மு.அ.பாரதி | – | ரூ.10100 |
| டாக்டர் த.அறம் | – | ரூ.10000 |
| வி.பாலமுருகன் | – | ரூ.5000 |
| கோ.பாண்டியன் | – | ரூ.5000 |
| திருச்சி என்.பாலகிருஷ்ணன் | – | ரூ.5000 |
| எஸ்.டி.பிரபாகரன் | – | ரூ.3000 |
| எல்.மணி | – | ரூ.2500 |
| டி.சுபாஷ் சந்திரபோஸ் | – | ரூ.2000 |
| ஏ.ராஜ்குமார் | – | ரூ.2000 |
| எஸ்.ரவிச்சந்திரன் | – | ரூ.2000 |
| கே.உலகநாதன் | – | ரூ.2000 |
| சிவகுரு பாண்டியன் | – | ரூ.2000 |
| பி.முத்துவேலு | – | ரூ.2000 |
| உ.மா.செல்வராஜ் | – | ரூ.2000 |
| ஜி.முரளி | – | ரூ.2000 |
| டாக்டர் ஏ.ஆர்.சாந்தி | – | ரூ.2000 |
| எஸ்.ராதாகிருஷ்ணன் | – | ரூ.2000 |
| எம்.செல்வராஜ் | – | ரூ.2000 |
| ஜி.லதா | – | ரூ.2000 |
| இரா.நல்லகண்ணு | – | ரூ.1000 |
| மு.வீரபாண்டியன் | – | ரூ.1000 |
| எஸ்.ராமநாதன் | – | ரூ.1000 |
| கே.ராமசாமி | – | ரூ.1000 |
| ஆ.வளர்மதி | – | ரூ.1000 |
| பா.கார்த்தி | – | ரூ.1000 |
| டி.சின்னசாமி(கிருஷ்ணகிரி) | – | ரூ.1000 |
| இரா.சுந்தரவள்ளி | – | ரூ.1000 |
| பி.பழனி | – | ரூ.1000 |
| எஸ்.கண்ணு | – | ரூ.1000 |
| எஸ்.சின்னசாமி(ஈரோடு) | – | ரூ.1000 |
| நா.சாத்தையா | – | ரூ.1000 |
| கமலாமூர்த்தி | – | ரூ.1000 |
| பி.ராஜலெட்சுமி | – | ரூ.1000 |
| எஸ்.சிவா | – | ரூ.1000 |
| கே.எம்.இசாக் | – | ரூ.1000 |
| இரா.தங்கராசு | – | ரூ.1000 |
| அ.பாஸ்கர் | – | ரூ.1000 |
| பி.கரும்பன் | – | ரூ.1000 |
| வீ.ஞானசேகரன் | – | ரூ.1000 |
| கே.பெருமாள் | – | ரூ.1000 |
| கே.அன்புமணி | – | ரூ.1000 |
| அ.சீனிவாசன் | – | ரூ.1000 |
| செந்தில்குமார் | – | ரூ.1000 |
| சு.குணசேகரன் | – | ரூ.1000 |
| அ.சௌரிராஜன் | – | ரூ.1000 |
| ஜி.மஞ்சுளா | – | ரூ.1000 |
| தினேஷ் சீரங்கராஜ் | – | ரூ.1000 |
| பி.காமராஜ் | – | ரூ.1000 |
| எஸ்.ஏழுமலை | – | ரூ.1000 |
| லி.உதயகுமார் | – | ரூ.1000 |
| அஸ்வினிகுணசேகரன் | – | ரூ.1000 |
| எஸ்.ராஜ்குமார் திருச்சி | – | ரூ.1000 |
| எல்.மணி | – | ரூ.1000 |
| டி.செல்வம் | – | ரூ.1000 |
| நாகஜோதி | – | ரூ.1000 |
| த.லெனின் | – | ரூ.1000 |
| எஸ்.கே.சிவா | – | ரூ.1000 |
| பா.காளிதாஸ் | – | ரூ.1000 |
| வி.ஜெயராமன் | – | ரூ.1000 |
| நீலகிரி போஜ்ராஜ் | – | ரூ.1000 |
| எம்.எஸ்.முருகன் | – | ரூ.1000 |

## விடைகள்

1. மௌலானா அபுல் கலாம் ஆசாத்
2. அரசியல் சட்டப் பிரிவு 370
3. 1889 ஆம் ஆண்டு சிகாகோ நகரில் கொண்டாடப்பட்டது
4. எம்.ஜி.ஆர். ஆட்சியில்
5. கோவிட் 19 வைரஸ்
6. 1918 ஆம் ஆண்டு ஏப்ரல் 13.

# சாகடிக்கப்பட்ட சட்டத்தின் ஆட்சி!

**செய்தியாளர் சந்திப்பிலேயே சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் எம்.பி அதிக் மற்றும் அவரது தம்பி உ.பி.யில் நடந்த நேரடிக் கொலை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**



த.லெனின்

கடந்த ஏப்ரல் 15 ஆம் தேதி உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அதிக் அகமது மற்றும் அவரது சகோதரர் அஷ்ரஃப் ஆகியோர் செய்தியாளர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது காவல்துறையினரின் முன்னிலையிலேயே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜூ பால் கொலை வழக்கில், அதிக் அகமது, அஷ்ரஃப் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அந்தக் கொலை வழக்கின் சாட்சியான உமேஷ் பால் கொல்லப்பட்டது தொடர்பான விசாரணைக்காக இருவரும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

ஜான்சியில் இரண்டு நாட்களுக்கு முன்பு உத்தர பிரதேச காவல்துறையின் சிறப்பு அதிரடிப்படையால், அதிக் அகமதின் மகன் ஆசாத் என்கவுன்டர் செய்யப்பட்டார்.

இந்த என்கவுன்டரில் ஆசாத்துடன் மற்றொருவராக கூறப்படும் குலாம் என்பவரும் கொல்லப்பட்டார். ஆசாத், குலாம் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் சனிக்கிழமையன்று நடந்தன.

அதிக் மற்றும் அஷ்ரஃப் படுகொலை செய்யப்பட்டது குறித்து உத்தர பிரதேச காவல்துறை சிறப்பு புலனாய்வு குழுக்களை அமைத்துள்ளது. ஆனால், அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதுவும் அவர்கள் மருத்துவ சிகிச்சை தங்களுக்காக கேட்காத போதும் வலுக்கட்டாயமாக அதுவும் நடந்தே அழைத்துச் செல்லப்பட்டு இருப்பது அதைவிட கொடுமையானது. அந்த நேரத்தில் பத்திரிகையாளர் சந்திப்பை இவர்களுக்கு ஏற்பாடு செய்தது கடும் சந்தேகத்தை தரக்கூடியது. எனவே பத்திரிகையாளர்கள் போர்வையில் இருந்த மூன்று பேர் தான். அதுவும் இவர்களை குற்றவாளிகளுக்கு அடையாளம் தெரியாது. அவர்களையும் இவர்களுக்கு அடையாளம் தெரியாது. இந்த இடத்தில் அத்திக்கையும், அஷ்ரபையும் அடையாளம் காட்டியதே காவல்துறைதான். அதன் பிறகுதான் அவர்கள் துப்பாக்கி சூடு நடத்தி அந்த படுகொலையும் அரங்கேறி இருக்கிறது என்பதாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் தடை செய்யப்பட்ட 7 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சிக்மா துப்பாக்கி இந்த கொலைக்காக பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பது அதைவிட அதிர்ச்சியானது தடை செய்யப்பட்ட இந்த ஆயுதம் இந்த கொலையாளிகளுக்கு எப்படி கிடைத்தது? சரி சுடப்பட்ட பிறகு அந்த இடத்திலே ஜெய் ஸ்ரீ ராம் முழக்கம் எதற்கு வந்தது? ஆக இப்படி எல்லாவற்றையும் இணைத்து பார்க்கிறபோது யோகி ஆதித்யநாத் ஆட்சியில் உத்தரப்பிரதேசம் மிகப்பெரும் கொலைகளமாக மாற்றப்பட்டு இருக்கிறது என்பது புலனாகிறது.

அதுவும் நேரடி கொலைகள் இதுவரை 180 க்கும் மேல் அங்கு நடந்துள்ளது. ஊழல் நடவடிக்கைகளை சமூகத்திற்கு எடுத்துச் சொல்லக்கூடிய விழிப்புணர்வு பணியில் இருக்கக் கூடியவர்கள் தொடர்ந்து அங்கு படுகொலைக்கு உள்ளாகிறார்கள். ஒரு தாழ்த்தப்பட்ட பெண் தனது கல்லூரி தேர்வு முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பும்போது அவரை வழிமறித்து துப்பாக்கியால் சுட்டுக் கொள்கிறார்கள்.

அமெரிக்காவை விட அதிக வேகமாக பரவி இருக்கிற ஆயுத கலாச்சாரம் துப்பாக்கி கலாச்சாரம் உத்தர பிரதேசத்தில் எப்படி சாத்தியமானது? இதற்கும் அங்கு இருக்கிற பாஜக ஆட்சிக்கும் தொடர்பு இல்லாமல் எப்படி இருக்கும்? ஏற்கனவே அங்கு சிறுபான்மை மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள் வேண்டுமென்றே அவர்கள் வீடுகள் சொத்துக்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன இதன் தொடர் நடவடிக்கையாக தான் இந்த என்கவுண்டர் நேரடி கொலையையும் நாம் பார்க்க வேண்டும்

அதிக் அகமது, அஷ்ரஃப் இருவரும் செய்தியாளர் சந்திப்பின்போது கொலை செய்யப்பட்ட இடத்தில் தடயவியல் நிபுணர்கள் தடயங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதாக ஏ.என்.ஐ செய்தி முகமை தெரிவிக்கிறது.

உத்தரபிரதேச காவல்துறை இதுவரை ஆதிக் மற்றும் அஷ்ரஃப் கொலை குறித்து அறிக்கை வெளியிடுவதற்கு முன்பே அதிக் மற்றும் அஷ்ரஃப் கொலை செய்யப்பட்ட சம்பவம் கேமராவில் பதிவாகி அந்த காட்சிகள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன. அந்தக் காணொளியில், தாக்குதல் நடத்தியவர்கள் மீது போலீசார் பதிலடி எதுவும் கொடுக்கவில்லை. அமைதிகாத்து நெட்டை மரம் போல் நின்றது யோகியின் காட்டாட்சியின் மாட்சியாக உணர்த்தப்பட்டது.



இந்தப் படுகொலை குறித்துக் கேள்வி எழுப்பிய உத்தர பிரதேச முன்னாள் முதல்வர் அகிலேஷ் யாதவ், "உத்திர பிரதேசத்தில் குற்றங்கள் உச்சத்தை எட்டியுள்ளன, குற்றவாளிகளுக்கு தைரியம் அதிகரித்துள்ளது. இது இப்படியே தொடர்ந்தால், பொது மக்களின் பாதுகாப்பு என்னாவது? இதனால், பொதுமக்கள் மத்தியில் பீதி உருவாகியுள்ளது'' என்று தனது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உத்தரப்பிரதேச பாரதிய ஜனதா கட்சி ஆட்சி ஒரு கும்பல் கொடுங் கோன்மை ஆட்சியின் பிரதிநிதியாக செயல்படும் தன்மைக்கு சீரழிந்து போய்விட்டது. அதன் விளைவு தான் சிறுபான்மை மக்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்படுகிறார்கள்.

தலித் மக்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் மீது தொடர்ந்து வன்மத்தோடு தாக்குதல் நடத்தப்படுகிறது பசு குண்டர்கள் என்கிற பெயரில் ஒரு மோசடியான குண்டர் படை உத்திரப்பிரதேசத்தின் சட்ட ஒழுங்கை கையில் எடுத்துக் கொண்டு செயல்பட்டு கொண்டு வருகிறது இவற்றையெல்லாம் கண்மூடித்தனமாக ஆதரிப்பதே தனது தேசபக்த கடமையாக கொண்டிருக்கிறது பாஜக ஆட்சி.

ஒட்டுமொத்தமாக இந்த நிகழ்வுகளை எல்லாம் பார்த்தால் சட்டத்தின் ஆட்சிக்கு சமாதி கட்டி விட்டனர் என்பதே உண்மை.

சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்த இந்த சனாதான இந்துத்துவ வெறிப்பிடித்த படையை ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்துவது என்பது மிகவும் முக்கியம் ஜனநாயகத்தை மேம்படுத்தும் இந்த அரசியல் செயலில் மக்களை ஈடுபடுத்துவது என்பதுதான் மக்களாட்சியை காக்கும் கடைசி வழிமுறையாகும் மக்களை திரட்டுவோம் கும்பல் காட்டாட்சியை விரட்டுவோம்!

தொடர்புக்கு: 94444 81703

**எதிரும் - புதிரும்**

## 2022-23 நிதி ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 7% ஆக இருக்குமாம்!




சர்வதேச செலாவணி நிதியம் (ஐஎம்எஃப்) மற்றும் உலக வங்கியின் வருடாந்திர கூட்டம் அமெரிக்காவில் நடைபெற்றது. வாஷிங்டனில் உள்ள ஐஎம்எஃப் தலைமையகத்தில் நடைபெற்ற நிதிக் குழு கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்றார். அந்தக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

தற்போது உலக அளவில் பொருளாதார நெருக்கடி காணப்பட்டு வருகிறது. இந்தச் சூழலிலும் இந்தியாவின் பொருளாதாரம் மேம்பட்ட நிலையில் இருப்பதாக ஐஎம்எஃப் மற்றும் உலக வங்கி குறிப்பிட்டு வந்தன.


"2023ம் ஆண்டில் இந்தியா வேகமாக வளரும் பொருளாதார நாடாக திகழும் என்று சர்வதேச செலாவணி நிதியமும் உலக வங்கியும் கணித்து உள்ளன. இந்தியாவின் இந்தப் பொருளாதார வளர்ச்சி தொடரும். 2022–23 நிதி ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு தொழில் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட பொருளாதார கொள்கைகளே இந்தியாவின் பொருளாதாரத்தை நல்ல நிலையில் வைத்திருக்க செய்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

ஐஎம்எஃப் கூட்டத்தில்
நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேச்சு

**இதுதான் உண்மை நிலவரம்**

## கடும் சரிவில் நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி



கடந்த 2014ஆம் ஆண்டு நரேந்திர மோடி ஆட்சியில் அமர்ந்த நாள் முதல் நாட்டின் பொருளாதாரம் ஏறுவரிசைக்கு அர்த்தம் தெரியாமல் அதல பள்ளத்திற்கு சென்று வருகிறது. அனைத்து துறைகளும் அடி மேல் அடி வாங்கி வரும் நிலையில், நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதி முன்னெப் போதும் இல்லாத அளவில் 2023 மார்ச் மாதம் கடும் சரிவைக் கண்டுள்ளன. மார்ச் மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி 13.9 சதவீதமாகவும், இறக்குமதி 7.9 சதவீதகமாவும் குறைந்துள்ளது. மார்ச் 2022இல் ஏற்றுமதி ரூ.3.6 லட்சம் கோடியாகவும், இறக்குமதி ரூ.5.1 லட்சம் கோடியாகவும் இருந்த நிலையில், நடப்பாண்டில் (மார்ச்) ஏற்றுமதி ரூ.3.1 லட்சம் கோடியாகவும், இறக்குமதி ரூ.4.7 லட்சம் கோடியாகவும் சரிந்து இந்திய வர்த்தக உலகில் கடும் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

### 1.5 லட்சம் கோடி வர்த்தகப் பற்றாக்குறை

2021–22ஆம் ஆண்டிற்கான மொத்த வர்த்தகப் பற்றாக்குறை ரூ. 6.7 லட்சம் கோடியாக இருந்த நிலையில், 2022–23 ஆம் ஆண்டிற்கான மொத்த வர்த்தக பற்றாக்குறை ரூ.9.9 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இதில் மிகவும் அதிர்ச்சி சம்பவம் என்ன வென்றால் கடந்த ஒரு மாதத்தில் மட்டும் வர்த்தக பற்றாக்குறை ரூ.1.5 லட்சம் கோடி உயர்ந்துள்ளதுதான். மார்ச் 2023 இல் சரக்குகள் மற்றும் சேவைகள் உட்பட நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி ரூ.5.4 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், மார்ச் 2022ஐ விட மார்ச் 2023இல் 7.53% அளவில் சரிவை கண்டுள்ளது. மார்ச் 2023 இல் சரக்குகள் மற்றும் சேவைகள் ஒட்டுமொத்த இறக்குமதிகள் ரூ.5.8 லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், மார்ச் 2022 ஐ விட மார்ச் 2023 இல் 7.98% அளவிற்கு எதிர்மறையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

சரக்கு இறக்குமதியில் கடந்த மார்ச் மாதம் 30 முக்கிய துறைகளில் 14 துறைகள் மிக மோசமான அளவில் சரிவைக் கண்டுள்ளன.

# தோழர் வில்வத்திற்கு அம்பேத்கர் விருது

"என் சிந்தனையும் செயலும் பொதுவுக்கானது" என்ற குறிக்கோளோடு கோவை வேலாண்டிபாளையம் பகுதியில் கடந்த 50 ஆண்டுகளாக சமூக, அரசியல், இலக்கிய செயல்பாடுகளில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வரும் தனிமனித ஆளுமைகளுள் ஒருவரான வில்வத்திற்கு அம்பேத்கர் விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருஷோத்தமன் தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக் குழுத் தலைவருமான கே.சுப்பராயன் தோழர் வில்வத்திற்கு அம்பேத்கர்விருது வழங்கி சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் கோவை மாவட்டச் செயலாளர் அ.அசரப் அலி, மாமன்ற உறுப்பினர்கள் கே.பிரவீன் ராஜ், பி.மல்லிகா, முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் கே.ஆறுமுகம், கு.பாலகிருஷ்ணன், தி.மு.க. பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணராஜ், மதிமுக பகுதி செயலாளர் வைகோ பழனிச்சாமி, டாக்டர் டென்னிஸ் கோவில் பிள்ளை, இஸ்கஃப் பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களின் பொறுப்பாளர்கள் முன்னிலை வகித்தனர்.

சிபிஎம் கோவை மாவட்டச் செயலாளர் சி.பத்மநாபன், தமிழ்நாடு பழங்குடியினர் சங்கத்தின் செயல்பாட்டாளர் வி.பி.குணசேகரன், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தேசிய செயலாளர் ச.பாலமுருகன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்டச் செயலாளர் ப.பா.ரமணி, ஒடியன் லட்சுமணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

# லேப் டெக்னீசியன்கள் ஆர்ப்பாட்டம்

கோவை, திருப்பூர் மாவட்டங்களில் சிறிய தனியார் ரத்த பரிசோதனை நிலையங்கள் ஏராளமாக உள்ளன.

இவற்றிலிருந்து, மருத்துவக் கழிவுகளை அகற்றும் பணியை, தனியார் நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. இவை கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்றன.

எனவே, இக்கட்டணத்தை 750 ரூபாயாக உடனடியாக குறைக்க வேண்டும்.

தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாக மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கான நிறுவனங்களை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி பாரா மெடிக்கல் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ஏப்.17 அன்று கோவை செஞ்சிலுவைச் சங்கம் அருகில் சங்கத்தின் அகில இந்திய தலைவர் பி.காளிதாசன் தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், பாரா மெடிக்கல் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் மாநிலத் தலைவர் எல்.துரைசாமி, மகளிர் அணி மாநில அமைப்பாளர் எஸ். கலா ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

கோவை மாவட்ட தலைவர் சிவகுமார் நன்றி நவின்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் 100 க்கும் மேற்பட்ட லேப் டெக்னீசியன்கள் கலந்து கொண்டனர்.

# அறநிலையத் துறையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இந்து சமய அறநிலையத்துறையின் கோவில் நிலங்களில் விவசாயம் செய்பவர்கள், கோவில் மனைகளில் குடியிருப்போர் சங்கம் மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில், மதுரை திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் த.வி.ச தாலுகாச் செயலாளர் மகாமுனி தலைமையில் தாங்கினார். மேலும் சி.பி.ஐ புறநகர் மாவட்டச் செயலாளர் முத்துவேல், எஸ்.கே.எம் மாவட்டச் செயலாளர் சந்தனம், ஏ.ஐ.டி.யு.சி மாவட்டப் பொதுச் செயலாளர் சேது, என்.எஃப்.ஐ.டபுள்யு புறநகர் பொறுப்புச் செயலாளர் நாகஜோதி மற்றும் பலர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

# ஸ்ரீ வில்லிபுத்தூர் வி.தொ.ச. வட்ட மாநாடு

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீ வில்லிபுத்தூர் வட்ட தமிழ் மாநில விவசாய தொழிலாளர்கள் சங்க மாநாடு அச்சம்தவிழ்த்தான் கிராமத்தில் நடைபெற்றது. கிளை செயலாளர் கணேசன் தலைமை வகித்தார். சிபிஐ தேசிய குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ,, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், வட்ட செயலாளர் பலவேசம், துணை செயலாளர் செல்வம், நகர செயலாளர் மூர்த்தி ஆகியோர் பேசினர்.

100நாள் வேலைக்கு கூலியையும் ,வேலை நாட்களையும் அதிகரிக்க வேண்டும், பேரூராட்சி, நகராட்சிக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# சமூக ஊடக செயல்பாட்டாளர்களுக்கு மூன்று நாள் பயிற்சி பட்டறை





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சமூக ஊடகக் குழு கூட்டம் ஏப்ரல் 15 அன்று, திண்டுக்கல்லில் கட்சியின் தேசிய நிர்வாக குழு உறுப்பினர் டி.எம். மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மத்திய சென்னை, தென் சென்னை, கள்ளக்குறிச்சி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, புதுக்கோட்டை, அரியலூர், திருச்சி புறநகர், ராமநாதபுரம், குமரி, தென்காசி, விருதுநகர், மதுரை புறநகர், தேனி, திண்டுக்கல், சேலம், ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் மாநகர், திருப்பூர் புறநகர், கோவை ஆகிய மாவட்டங்களில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்றனர். நோக்கங்கள் குறித்து கூட்டத் தலைவர் டி.எம் மூர்த்தி பேசினார்.

நீண்ட அனுபவம் கொண்ட பத்திரிக்கையாளரான மணிமாறன் ஊடகத்திற்கும் சமூக ஊடகத்துக்கும் உள்ள வேறுபாடுகள் குறித்தும், மேற்கொள்ள வேண்டிய பணிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார். சமூக ஊடகங்களின் வகைகள் குறித்தும் அவற்றில் உள்ளடங்கிய தொழில்நுட்பம் பற்றியும் ஆதவன் விளக்கினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் வெகு மக்கள் அரங்குகளுக்காக சமூக ஊடகப் பணி ஆற்றிய அனுபவம் கொண்ட எஸ். செல்வகுமார் கட்சி அரசியல், அமைப்பு நிலை ஆகியவற்றை ஒட்டி சமூக ஊடக செயல்பாட்டை முன்னெடுப்பது பற்றி பேசினார்.

ஆனந்த் பாசு, நாகஜோதி, சதீஷ் கார்க்கி உள்ளிட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் பங்கேற்றனர்.

மாநில ஒருங்கிணைப்பாளர் ஒருவர், நான்கு மண்டல ஒருங்கிணைப்பாளர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஒருங்கிணைப்பாளர், இடைக் குழுக்களுக்கு ஒருங்கிணைப்பாளர், ஒவ்வொரு இடைக் குழுவுக்கும் ஒரு ஊடக செயல்பாட்டாளர் குழு என்றவாறு அமைப்புகளை உருவாக்குவது என கூட்டம் முடிவு செய்தது. மாநில ஒருங்கிணைப்பாளராக எஸ். செல்வகுமாரை கூட்டம் தேர்ந்தெடுத்தது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை சம்பந்தப்பட்ட செயலாளர்களோடு கலந்து கொண்டு தேர்வு செய்வது எனவும், பின்னர் மண்டல மற்றும் இடைக் குழு பொறுப்பாளர்களை நியமிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பங்கேற்றவர்களில் இருந்து 40 பேரை தேர்வு செய்து, மூன்று நாள் பயிற்சி பட்டறை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

100 பேர் கலந்து கொண்ட இந்த கூட்டத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து தந்த கட்சியின் திண்டுக்கல் மாவட்ட குழுவுக்கும் அதன் செயலாளர் ஏ.பி.மணிகண்டனுக்கும் கூட்டம் நன்றி தெரிவித்தது.

# பவானி ஆறு மாசுபடுவதை தடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்!

பவானிசாகர் அணையில் சமீப நாட்களாக நீர் கடும் துர் நாற்றம் வீசுகிறது. அணையில் மீன்களும் செத்து மிதக்கிறது;நீரின் நிறமும் மாறுபட்டு இருக்கிறது.

பவானி ஆற்று நீர்தான் இம்மாவட்டத்தில் மட்டுமல்லாது திருப்பூர்,கோவை மாவட்டங்களின் லட்சக்கணக்கான மக்களின் குடிநீர்தேவையை பூர்த்தி செய்கிறது. கீழ்பவானி பாசனம்,தடப்பள்ளிஅரக்கன் கோட்டை பாசனம்,கொடிவேரி பாசனம்,காளிங்கராயன் பாசனம்,நீரேற்று பாசனம்,கசிவுநீர் பாசனம் போன்ற பாசனத்திட்டங்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெற்று வருகின்றன.

ஈரோடு,திருப்பூர்,கோவை,கரூர் மாவட்டங்களின் வாழ்வாதாரமாக பவானி ஆறு உள்ளது. சௌத் இந்தியா விஸ்கோஸ் ஆலை மூடப்பட்ட பின்,பவானி ஆறு மாசுபடுவது குறைந்ததால் சற்று நிம்மதிப் பெருமூச்சு விட்டிருந்த மக்களுக்கு சமீபகால பவானி ஆற்று நீரின் தன்மை மாறுபட்டு வருவது பேரிடியாக உள்ளது.

ஈரோடு மாவட்டத்தின் பவானி ஆற்றங்கரையோரத்து மக்கள் பெரிய அளவில் புற்று நோய் பாதிப்புகளுக்கு ஆளாகி வருகிறார்கள். கடந்த வாரம் சட்டப் பேரவைக் கூட்டத்தில் கூட இப்பிரச்சனை விவாதிக்கப்பட்டுள்ளது. இது மக்களிடையே பேரச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே தமிழ்நாடு அரசு, இப்பிரச்சனையில் தீவிர கவனத்தை செலுத்தி பவானி ஆற்றின் கரையோரத்தில் உள்ள ஆலைகளின் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும் என இக்கூட்டம் அரசை கோருகிறது.

இப்பிரச்சனையின்பால் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இயக்கங்களை நடத்தவும் கூட்டம் தீர்மானித்துள்ளது.

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்செங்கோடு ஒன்றிய மாநாடு

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு ஒன்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 7வது மாநாடு நகர கட்சி அலுவலகத்தில் முன்னாள் ஒன்றிய செயலாளர் கே.தங்கராசு தலைமையில் நடைபெற்றது. எம்.கணேசன், கே.முரளிகிருஷ்ணன், எம்.பாரதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன் மாநாட்டை துவக்கி வைத்தார். கே.முரளிகிருஷ்ணன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.

கே.அன்புமணி சிபிஐ மாவட்ட செயலாளர், எஸ்.ஜெயராமன் ஏஐடியுசி மாவட்ட தலைவர், எஸ்.சுகுமார் சிபிஐ நகர செயலாளர், பி.கார்த்திக் சிபிஐ நகர துணை செயலாளர், சி.ஜெயராமன் வி.தொ.ச மாவட்ட செயலாளர், டி.கே.சுப்பிரமணி ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத் தலைவர், என்.செல்வராஜ் வி.ச. மாவட்ட செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஒன்றிய செயலாளராக பி.எஸ். முனுசாமி, துணைச் செயலாளர்களாக கே.தங்கராசு, கே.முரளிகிருஷ்ணன், பொருளாளராக எம்.கணேசன் தேர்வு செய்யப்பட்டனர். ஒக்கிலிப்பட்டி பஞ்சாயத்து சன்னபாறை பகுதியில் புதிய தெரு விளக்குகள் அமைத்து கொடுக்க வேண்டியும் மற்றும் கழிப்பிட வசதி செய்து கொடுக்க வேண்டியும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீர் நிலை, அரசு புறம்போக்கு இடங்களில் வசிக்கும்

# விவசாய தொழிலாளர்களுக்கு குடிமனை பட்டா கேட்டு ஆர்ப்பாட்டம்



திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியம் முழுவதும் உள்ள 32 ஊராட்சிகளிலும் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

100 நாள் வேலையினை 200 நாட்களாக உயர்த்திடவும், நாள் ஊதியம் ரூ.600 வழங்கிடவும், 400 சதுர அடியில் அரசு வீடு வழங்கிடவும், குடியிருக்க வீடு இல்லா அனைவருக்கும் ரூ.6லட்சத்தில் வீடு வழங்கிடவும், ரூ.2 லட்சத்து 74 ஆயிரம் கோடி தொகையினை இந்த திட்டத்திற்கு ஓர் ஆண்டுக்கு ஒதுக்கிடவும், குடும்பத்தில் அனைவருக்கும் தனித்தனியாக 200 நாட்கள் வேலை வழங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 100 நாள் பணி நடைபெறும் இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

கோ.பழனிச்சாமி எக்ஸ்.எம்.எல்.ஏ விளக்குடியிலும், கே.உலகநாதன் எக்ஸ்.எம்.எல்.ஏ. நுணாக்காட்டிலும், அ.பாஸ்கர் கீரக்களூரிலும், கே.ஆர்.ஜோசப் ராயநல்லூரிலும், கே.ராஜா மேட்டுப்பாளையத்திலும் கலந்து கொண்டு ஒன்றிய, மாநில அரசுக்கு எதிரான கண்டன முழக்கங்களையும், போராட்டத்தின் கோரிக்கைகளையும் விளக்கி பேசினர்.

**திருவாரூர்:** திருவாரூரில் 14 ஊராட்சி மன்ற அலுவலங்களிலும், நூறு நாட்கள் வேலை நடைபெறும் 6 இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சங்கத்தின் மாவட்ட துணை செயலாளர் எம்.நாகராஜன், சிபிஐ மாவட்டக் குழு உறுப்பினர்கள் கே.புலிகேசி, டி.தியாகராஜன், சங்கத்தின் ஒன்றிய செயலாளர் எஸ்.சித்திரகனி, ஒன்றிய துணை தலைவர் எஸ். பாஸ்கரன், ஒன்றிய துணை செயலாளர் கே. ஜெயசந்திரன் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். சங்க மாவட்ட துணைச்செயலாளர் ஜி.பச்சாகவுண்டர், மாவட்ட துணைத்தலைவர்கள் ஜி. ராஜகோபால், என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழ உறுப்பினர்கள் வெ.பை. மாதையன், எல்.சி.கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

அரியலூர், ஜெயங்கொண்டத்தில்

# துப்புரவு பணியாளர்கள் உண்ணாவிரதம்

காலி பணியிடங்களை நிரப்பாமல் தனியாரிடம் ஒப்படைத்து ஆள் குறைப்பு எனும் அரசாணை 10ஐ தமிழ்நாடு அரசு திரும்ப பெறவும் வலியுறுத்தி அரியலூரில், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சி நிரந்தர மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

சங்கத் தலைவரும் ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளருமான த.தண்டபாணி தலைமை வகித்தார்.

இப்போராட்டத்தை ஏஐடியூசி அகில இந்திய துணைத் தலைவரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருப்பூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினருமான கே.சுப்பராயன் பங்கேற்று துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

ஏஐடியூசி உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் பி.எல். ராமச்சந்திரன் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார். சிபிஐ மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், மாவட்டச் செயலாளர் சொ.ராமநாதன், திருபுரந்தான் ஊராட்சி மன்ற தலைவர் இரா.உலகநாதன், திருமானூர் ஆறுமுகம், வால்பாறை மாணிக்கம், ஏஐடியூசி தனசிங் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .

**கலை இலக்கியம்**

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்தநாள் விழா

நாகை மாவட்டம், வேதாரண்யத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பிறந்தநாள் இலக்கிய அமர்வு நிகழ்ச்சி ஏப்.15 அன்று நடைபெற்றது.

மன்றத்தின் கிளைத் தலைவர் இள.தொல்காப்பியன் தலைமை வகித்தார்.

கிளைச் செயலாளர் தங்க.குழந்தைவேலு, பொருளாளர் சு.பாலாஜி, தமிழ்த்துறை ஆய்வு மாணவி த.சுகன்யா, சட்டக் கல்லூரி மாணவி ர.அகிலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்டத் தலைவர் புயல் குமார், மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, மாவட்டப் பொருளாளர் கா.கைலாசம் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

பள்ளி பாட புத்தகங்களில் அனைத்து வகுப்புகளிலும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்களையும், அவரின் வாழ்க்கை வரலாற்றையும் விரிவான அளவில் கொண்டுவர தமிழக அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஆவணப்படம் திரையிடல்**

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கோவை கிழக்கு சார்பில் எழுத்தாளர் ஒடியன் லட்சுமணன் தலைமையில் மக்கள் கவிஞர் பட்டுகோட்டை கல்யாண சுந்தரம் விழா நடைபெற்றது. சாரோன் எழுதிய கரியோடன் கதை புத்தக அறிமுகம் பேராசிரியர் அரிகரசுதன் அவர்களால் செய்யப்பட்டது.

பேரா.சாரோன் இயக்கிய மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஆவணபடம் திரையிடப்பட்டது.

மாநிலப் பொருளாளர் ப.பா.ரமணி, மாநில செயற்குழு உறுப்பினர் ஜான், மாநிலக் குழு உறுப்பினர்கள் ஜீவபாரதி, பாலசந்திரன், செல்வின், திலீப் குமார், எழுத்தாளர் அமரானந்தா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை யு.கே. சுப்பிரமணியன் ஒருங்கிணைத்தார்.

**சிறப்பு பட்டிமன்றம்**

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திருப்பூர் வடக்கு மாநகரம் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் விழா சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் பாக்களில் மேலோங்கி இருப்பது மொழிப்பற்றா? புரட்சிக் கருத்தா? என்ற தலைப்பில் கவிஞர் ரவீந்திரபாரதி தலைமையில் பட்டிமன்ற நிகழ்வு நடந்தது.

த.சசிகலா வரவேற்புரை ஆற்றினார். எஸ்.ஏ.காதர் துவக்கவுரை ஆற்றினார்.

பாரதி சுப்பராயன் தலைமையுரை ஆற்றினார்.

திருப்பூர் மாநகர துணை மேயர் ஆர்.பாலசுப்பிரமணியம், த.க.இ.பெ. மாவட்ட தலைவர் பி.ஆர்.நடராசன், த.மு.எ.க.ச. மாநில செயற்குழு உறுப்பினர் ஆர்.ஈஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பட்டிமன்றம் நிகழ்வில் முனைவர் மேரி ரோஸ்லின், ஆசிரியர் க.ராமசுப்பிரமணியம், சகா. பாலாஜி வந்தியத்தேவன்,

ஆசிரியர் அ.பழனி ஆசிரியர், க.ரணதிவே, கவிஞர் அபுதாஹிர் நூரானி ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் வாதங்களை எடுத்து வைத்தனர்.

எம்.பி.ராமகிருஷ்ணன் நன்றி கூற நிகழ்வு இனிதே முடிந்தது.

# அரசியல் தத்துவார்த்த பயிற்சி முகாம்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாவட்டக்குழு, இடைக்குழு உறுப்பினர்கள் மற்றும் கிளைசெயலாளர்கள், பங்கேற்ற அரசியல் தத்தவார்த்த பயிற்சி முகாம் கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் பி.முத்துவேல், மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் தலைமையில் நடைபெற்றது.

மாநில கட்டுப்பாட்டு குழு தலைவரும், திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.சுப்பராயன் பயிற்சி முகாமை துவக்கி வைத்து உரையாற்றினார். அமைப்பு நிலை கோட்பாடுகள், விதிகள் குறித்து மாநில செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, அரசியல் தீர்மானம் குறித்து தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் ம.செல்வராஜ் ஆகியோர் பேசினர்.

# ஆர்.சி.எச். தூய்மைப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்




பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பணிப் பாதுகாப்பு, பணிநிரந்தரம் வழங்கிட வேண்டும்.

நாள் தோறும் 12.00 மணி நேர வேலை என்பதை ரத்து செய்து, எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்பதை நடைமுறைப் படுத்த வேண்டும்.

வார விடுமுறை, மற்றும் அரசு விடுமுறை நாட்களில் விடுமுறை வழங்கிட வேண்டும். மருத்துவ விடுப்பு உள்ளிட்ட விடுப்புகளை உடனே வழங்கிட வேண்டும். இலவச சீருடை, இலவச பேருந்து பயண அடையாள அட்டை வழங்கிட வேண்டும். வருகைப் பதிவேட்டில் கையெழுத்திட அனுமதிக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு, தமிழ்நாடு அரசு ஆரம்ப சுகாதார நிலைய ஆர்.சி.எச். ஒப்பந்த சுகாதார துப்புரவுப் பணியாளர்கள் நலச் சங்கத்தின் , மாநிலத் தலைவர் என்.எஸ்.செல்வராஜ் தலைமை தாங்கினார். எஸ்.நிலா ஒளி, எம்.திருமகள், இ.மகாலெட்சுமி, எஸ்.செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் எஸ்.ஏ.என்.வசீகரன், ஆர்ப்பாட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றினார்.

ஆர்.சி.எச். ஒப்பந்த சுகாதார துப்புரவு பணியாளர்கள் நலச்சங்கத்தின், பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினார். ஏஐடியூசி மாநில பொதுச் செயலாளர் எம். இராதாகிருஷ்ணன், மே 17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி, உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து நிறைவு உரையாற்றினார்.

# நூல் வெளியீட்டு விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

இராமநாதபுரம் மாவட்டம், தங்கச்சி மடம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தோழரும், மீனவ பெருமக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கியவரும், தங்கச்சி மடம் ஊராட்சியின் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியவருமான தோழர் ஞானசிலன் குறித்து நூல் வெளியீட்டு விழா ஏப்.14 அன்று நடைபெற்றது.

விழாவில் தோழர் ஞானசீலன் குடும்பத்தின் சார்பில் ரூ.5000 ஜனசக்தி வளர்ச்சி நிதி வழங்கப்பட்டது.

## இந்த வார தம்பிக்குறள்

**114. கற்றவர்**

**கற்றவர் எல்லாம்ஒன் றுற்றவர்க்கே ஒன்றுற்றவர்**
**எல்லாஅம் கற்றவர்க் கே.**

கல்வி கற்றவர்களாகிய அறிஞர்கள், செல்வம் உடையவர்களிடமே சென்று சேர்ந்து விடுகிறார்கள். செல்வம் உள்ளவர்களும் கற்றவர்களையே சார்கிறார்கள். (பாமரர்கள் புறக்கணிக்கப்பட்டு விடுகிறார்கள்)

**பாவலர் எல்லாம் பணமதற் கேவலர்**
**என்பதே இன்றை நிலை.**

கவிஞர்கள் எல்லாம் (பேச்சாளர், எழுத்தாளர் உட்பட) பணத்திற்கே அடிமையாகிறார்கள். இன்றைய நிலையில் பிழைப்புக்கருதி இவர்கள் சார்பாகி விடுகிறார்கள்.

## கூலி முறை




கூலி முறை குறித்து லண்டனிலிருந்து வெளிவந்த பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தின் வார இதழான "த லேபர் ஸ்டாண்டர்ட்" என்னும் இதழில் எங்கெல்ஸ் எழுதிய தலையங்கங்களின் தொகுப்பே கூலி முறை என்னும் இந்நூல் ஆகும்

சாதாரண நிலைமைகளில் நேர்மையான நாள் கூலி என்பது தொழிலாளியின் நிலைமையும், நாட்டையும் பொறுத்துள்ள வாழ்க்கை தரத்தின் படி, தன்னை வேலை செய்யும் ஒழுங்கில் வைத்துக் கொள்வதற்கும். தன் இனத்தை பெருக்கிக் கொள்வதற்கும் அவசியமான பிழைப்பு சாதனங்களை பெற்று தருவதற்கு வேண்டிய தொகையே கூலியாகும்.

வணிகத்தின் ஏற்ற இறக்கங்களை ஒட்டி நடப்பில் உள்ள கூலி விகிதம், இந்த விகிதத்தை விட சில சமயங்களில் மேலாகவோ, சில சமயங்களில் கீழாகவோ இருக்கக் கூடும். எனினும் சாதாரண நிலைமைகளில் அந்த விகிதமானது எல்லாம் ஏற்ற, இறக்கங்களின் சராசரியாக இருக்க வேண்டும்.

ஒரு தொழிலாளி தன்னுடைய முழு நாளத்திய உழைப்பு சக்தியை முதலாளிக்கு கொடுக்கிறான், அதாவது இந்த பேரத்தை தொடர்ச்சியாக திரும்பத் திரும்ப செய்து கொள்வது சாத்தியமற்று போகாதபடி எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக் கிறான். இதற்கு பரிமாற்றமாக இதே நேரத்தை ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்ப செய்து வருவதை நிலை நிறுத்துவதற்குரிய பிழைப்பு சாதனங்கள் எவ்வளவு அவசியமோ அவ்வளவு மட்டுமே பெறுகிறான். அதற்கு மேல் இல்லை. பேரத்தின் தன்மை அனுமதிக்கிறதற்கேற்ப தொழிலாளி அதிகமாகவும், முதலாளி குறைவாகவும் கொடுக்கிறான். இது மிகவும் வேடிக்கையான நேர்மை தான்.

ஒரு தொழிலாளியின் உழைப்புக்கேற்ற ஊதியமோ அல்லது அவன் வாழ்க்கைகேற்ற ஊதியமோ இங்கு தரப்படுவதில்லை. மாறாக, அவன் அடுத்த நாள் வேலைக்கு வர வேண்டும் என்பதற்காகவும். அதுவரை அவன் உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காகவும் மட்டுமே ஊதியங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. இதுதான் முதலாளிகளின் கருனை மிகுந்த ஊதிய முறை. இது தொழிலாளி வர்க்கத்திற்கு சாதகமானது அல்ல.


அரசியல் பொருளாதாரம் எதை நேர்மையான நாள் கூலி என்றும், நேர்மையான நாள் வேலை என்றும் சொல்கிறது? பகிரங்கமான சந்தை யிலே, முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே உள்ள போட்டியால் நிர்ணயிக்கப்படுகிற கூலி விகிதமும், நாள் வேலையின் நேரமும், கடுமையும் மட்டும்தான் என்பதை மிக சரியாக விளக்கி உள்ளது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

| | |
|---|---|
| நூலாசிரியர் | : எங்கெல்ஸ் |
| பக்கம் | : 70 விலை : 70 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

## நூல் நயம்

### சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், மார்க்சியம் இந்தியப் புரிதல்




தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்ற பெருமையை பெற்ற சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின், நூற்றி ஐம்பதாவது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மார்க்சிய சிந்தனைப் பள்ளியில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் டி. ராஜா, எஸ். ஏ. பெருமாள் ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூல்

சிங்காரவேலர் மார்க்சியத்தை நமது மண்ணுக்கு ஏற்ப செயல்படுத்த வேண்டும் என்று விரும்பியவர். இந்திய மக்களுடைய பண்பாட்டு பாரம்பரிய பின்னணியில், இந்திய மக்களின் மனோபாவம், மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சி நிலைகள் அவற்றிற்கு உட்பட்டு இந்தியாவிற்கு ஏற்ற வகையில் மார்க்சியத்தை செயல்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தியாவினுடைய பிரச்சனைக்கு அது ஜாதி என்று சொன்னாலும், மதம் என்று சொன்னாலும், மூட பழக்க வழக்கங்கள் என்று சொன்னாலும் அதற்கு மார்க்சியத்தில் இருந்து தீர்வு பெற முயற்சிக்க வேண்டும். அந்த அளவில் மார்க்சியத்தை இந்தியாவிற்கு ஏற்ப செயல்படுத்த வேண்டும் என்று எண்ணியவர் சிங்காரவேலர்.

இந்தியாவிற்கு முழுமையான சுதந்திரம் வேண்டும் என்று முதலில் குரல் கொடுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள். சிங்காரவேலரின் தேசபக்தியே அவரை ஒரு கம்யூனிஸ்ட் ஆக மாற்றியது.

மக்கள் இன்றைக்கு வர்க்கங்களாக பிளவுபட்டு இருக்கிறார்கள். விவசாயிகள், தொழிலாளிகள், அறிவுஜீவிகள் உட்பட அனைவரும் வருகிறார்கள் இவர்கள் கருத்தாலும், கரத்தாலும் உழைக்கக் கூடியவர்கள். இந்த மக்கள் இன்றைக்கு சுரண்டுகிற வர்க்கத்திற்கு எதிராக போராடுகிறார்கள். வர்க்கங்கள் சமுதாயத்தில் இருக்கின்றன. அந்த வர்க்கங்களுக்கு இடையான மோதல்களும் புறநிலையில் இருக்கின்றன. இதை நாம் விரும்பி ஏற்படுத்தவில்லை,

அரசியல் அதிகாரத்தை அடைய இதுவரை சுரண்டப்பட்டு வந்த வர்க்கம், அரசியலை கையில் எடுக்கும் போது தான் அது புரட்சியாக மாறுகிறது. புரட்சிகர மாறுதலை கொண்டு வருகிறது என்று மார்க்ஸ் குறிப்பிட்டார். எனவே தொழிலாளி வர்க்க விடுதலைக்காக சதா சர்வ காலமும் சிந்தித்தவர் சிந்தனை சிற்பி சிங்காரவேலர். அவரது சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது இன்றைய காலத்தின் தேவை என்பதை இந்நூல் வலியுறுத்துகிறது. இந்நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்.

–சமரன்

| | |
|---|---|
| நூலாசிரியர் | : டி. ராஜா, எஸ். ஏ. பெருமாள், |
| பக்கம் | : 26 விலை: 30 |
| வெளியீடு | : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41 பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை–50 |

சுழலும் உலகம்

### மக்கள் விரோத ஓய்வூதிய முறை சட்டமானது

# பிரான்சில் மீண்டும் கொந்தளிப்பு




**பிரான்சின் ஓய்வூதியத் திட்டத்திற்கு ஆதரவாக அந்நாட்டின் அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதால் மீண்டும் போராட்டங்கள் வெடித்திருக்கிறது.**

பிரான்சில் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனின் புதியஓய்வூதியத்திட்டத்திற்குக்கடும்எதிர்ப்புஇருந்து வருகிறது. அதில் உள்ள இரண்டு அம்சங்களுக்கு அனைத்துத் தரப்பு மக்களிடமிருந்தும் கண்டனங்கள் கிளம்பியுள்ளன.

ஓய்வு பெறும் வயதை 62இல் இருந்து 64ஆக உயர்த்துவது மற்றும் ஓய்வூதியம் பெற 43 ஆண்டுகள் ஊதியத்தில் இருந்து ஓய்வூதியப் பங்களிப்பு செலுத்தியிருக்க வேண்டும் என்ற இரண்டு அம்சங்கள் ஓய்வூதியத்தைப் பறிப்பதற்கான விதிகளே என்ற கருத்து நாடு முழுவதும் நிலவு கிறது.

பெரும்பாலான மக்கள் இந்தப் புதிய திட்டத்தை ஏற்கவில்லை என்றே தெரிவிக்கின்றன. ஆனால், ஜனாதிபதி மக்ரோன் மற்றும் பிரதமர் எலிசபெத் போர்ன் ஆகியோர் புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். இந்நிலையில் அரசியலமைப்பு நீதிமன்றத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது.

புதிய ஓய்வூதியத் திட்டத்திற்கு ஆதரவாக அந்தத் தீர்ப்பு அமைந்துள்ளது. மக்கள் மத்தியில் இந்தத் தீர்ப்பு கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. தீர்ப்பு வெளிவந்து கொண்டிருந்த வேளையில், தலைநகர் பாரிசின் நகர்மன்றக் கூடத்தின் முன்பாக, "சூழல் கோபமயமாக உள்ளது" என்றும், "புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறாத வரையில் போராட்டங்கள் ஓயாது" என்றும் எழுதப்பட்ட பதாகைகளுடன் ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இங்கே நாங்கள்... மக்ரோன் விரும்பாவிட்டா லும் இங்கே நாங்கள்.." என்ற பாடல் அனைத்துப் போராட்டங்களிலும் மக்களால் பாடப்பட்டு வருகிறது. கோடிக்கணக்கான மக்கள் இந்தப் பாடலை பதிவிறக்கம் செய்திருக்கிறார்கள்.

"மக்களின் கோபத்தைக் கவனித்து, அதைப் புரிந்து கொள்ளுங்கள். நாட்டில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள். சட்டத்தை நடை முறைப்படுத்தாதீர்கள். மக்களின் கோபத்தைத் தணிக்க இதுதான் ஒரே வழியாகும்" என்று ஜனாதிபதியையும், அரசையும் ஒரு கூட்டறிக்கையின் வாயிலாக அனைத்துத் தொழிற் சங்கங்களும் வலியுறுத்தியுள்ளன.

# பிரிக்ஸ் அமைப்பிற்கு தனி நாணயம்?

### ஜனாதிபதி லூலா ஆலோசனை

**பிரேசில் மற்றும் சீனா, பிரேசில் மற்றும் பிற நாடுகளுக்கு இடையில் நிதி மற்றும் வர்த்தக உறவுகளுக்காக பிரிக்ஸ் போன்ற வங்கி ஒரு நாணயத்தை உருவாக்கலாம் என்று பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டி சில்வா ஆலோசனை தெரி வித்துள்ளார்.**

பிற நாடுகளுடனான வர்த்தகத்தில் டாலரை நம்பியிருப்பதைக் குறைப்பது பற்றி அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்றார்.

"சர்வதேச அளவிலான பிரச்சனைகளில் முடிவெடுக்கும் இடத்தில் பிரேசில் இல்லை என்பது கடந்த காலமாகிவிட்டது. சர்வதேச அரங்கில் மீண்டும் தனது பாத்திரத்தை வகிக்க பிரேசில் தொடங்கிவிட்டது. பொது முதலீடுகளை வெட்ட வேண்டும் என்ற ஐ.எம்.எப். நிபந்தனைகள் பல நாடுகளை மூச்சுத் திணற வைத்து விட்டன. தற்போது அர்ஜெண்டினா திணறுகிறது. முன்பு பிரேசிலுக்கும் இந்த நிலைமை இருந்தது" என்று குறிப்பிட்டார்.

சீனாவுடனான இருபதுக்கும் மேற்பட்ட உடன்பாடுகளில் லூலா கையெழுத்திடவிருக்கிறார். நிதி மற்றும் வர்த்தகப் பரிமாற்றங்களில் அமெரிக்க டாலருக்குப் பதிலாக உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கான உடன்பாடும் அதில் ஒன்றாகும். டாலரற்ற சர்வதேச வர்த்தகத்தை நோக்கி அனைத்து நாடுகளும் பயணிக்க வேண்டும் என்று இந்த உடன்பாடு குறித்து லூலா கருத்து தெரி வித்திருக்கிறார்.



**ரத்த நெடி வீசும் இந்த சாதிய ஆணவச் சமூகத்தில், சாதி தாண்டிய காதலை ஏற்க அஞ்சுகிற, 'என்னைக் கொன்று விடுவார்கள், விட்டுவிடு' என்று கதாநாயகியிடம் கெஞ்சுகிற புது வகையான கதாநாயகன்.**

# திரை விமர்சனம்




'இப்ப யாரு சார், சாதி எல்லாம் பாக்குறாங்க' என்ற குரலை அவ்வப்போது கேட்பதுண்டு.

கடந்த சில நாட்களுக்கு முன்பாக கூட ஒடுக்கப்பட்ட பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை திருமணம் முடித்து வந்த தனது மகனையும், தடுக்க வந்த தனது தாயையும், வீட்டுக்கு வந்த மருமகளையும் ரத்தம் சொட்ட சொட்ட வெட்டிப் போட்டுவிட்டு சரணடைந்த ஒரு சாதி வெறியனின் செயல், அந்த ஆணவக்கனல் கனன்று கொண்டு இருப்பதை உறுதிப்படுத்தியது.

இடைநிலை சாதியை சேர்ந்தவனைக் காதலித்த பட்டியலினப் பெண்ணை, கழுத்து வரை குழி தோண்டி புதைத்து விட்டு, வெளியில் தெரியும் தலையின் மீது பெரிய பாறாங்கல்லை போட்டு நசுக்கும் கொடூரத்தோடு, நெஞ்சைப் பதை பதைக்க வைத்து படம் ஆரம்பமாகிறது.

எந்தக் கதையாக இருந்தாலும், கதாநாயகியைப்பூப்போல மென்மையானவள் ஆகவும், கரப்பான் பூச்சியைக் கண்டு கூட நடுங்குவளாகவும், பால் நிற சருமம் கொண்டவளாகவும் படைப்பது தமிழ்ச் சினிமாவின் எழுதப்படாத விதி.

அதிலிருந்து மாறி, உரத்த குரலில் பேசுகிற, சமூகக் கொடுமைகளை அஞ்சாமல் எதிர்த்து நிற்கிற, ஒரு மாற்றத்திற்காக தன் உயிரையே தரச் சித்தமாக இருக்கிற ஒரு பெண்ணை கதாநாயகியாக உருவகப்படுத்தியதற்கு கதாசிரியருக்கு நன்றி சொல்ல வேண்டும். வணிகச் சினிமாவுக்காக, அந்தப் பாத்திரத்தை சிதைத்து விடாமல், அப்படியே திரையில் கொண்டு வந்த இயக்குனருக்கும் பாராட்டு.

அந்தப் பாத்திரத்தின் கனத்தை உணர்ந்து, சொந்த சாதியில் திருமணம் செய்யக்கூடாது என்பதற்காகவே ஒரு பட்டியலின இளைஞனை தேர்வு செய்து காதலிக்கும் பெண்ணாக, சுபபிரியா கதாநாயகியாக மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார்.

ரத்த நெடி வீசும் இந்த சாதிய ஆணவச் சமூகத்தில், சாதி தாண்டிய காதலை ஏற்க அஞ்சுகிற, 'என்னைக் கொன்று விடுவார்கள், விட்டுவிடு' என்று கதாநாயகியிடம் கெஞ்சுகிற புது வகையான கதாநாயகன்.

- ஆணவக் கும்பல் சுற்றி வளைத்துத் தாக்கும்போது வெடவெடத்துப் போய், கால் சட்டையைக் கழற்ற வேண்டாம் என்று அழுது துடிப்பதென்ன?
- தன்னைத் தேடும் காதலியின் பார்வை பட்டு, சிக்கிக் கொள்ளாமல் தப்பிப்பதற்கு ஒதுங்கி ஓடி ஒளிந்து கொள்வதென்ன?
- அன்புபாதி, ஆணை பாதி என்று அந்தப் பெண் வைக்கும் கோரிக்கைகளை ஏற்க முடியாமலும், அதே நேரத்தில் மறுக்க முடியாமலும் தயங்கி தயங்கி இணங்கும் ஈரெட்டான பாவனைகள் என்ன?
- உடல் வளைந்தும் தலை குனிந்தும் நடக்கிற தோற்றம் மாறி, காவல்துறையில் சேர்ந்த பின், கால் எட்டிப் போட்டு நடந்து, திமிர்த்த காளையாய் தலை நிமிர்த்தி உலவும் கம்பீரம் என்ன?
- அடுத்த வினாடி காதலி கொல்லப்பட இருக்கிறாள் என்பதை உணர்ந்து, கம்பீரம் தொலைத்து, அவளை உயிரோடு விட்டு விடுங்கள் என ஆணவ வெறி கும்பலிடம் மன்றாடுவதென்ன?

வெகு இயல்பாக, நேர்த்தியாக அத்தனையும் செய்திருக்கிறார் படத்தின் கதாநாயகனான புகழ் மகேந்திரன். ஏற்கனவே அவரது வாய்தா திரைப்படம் வெளிவந்திருந்தாலும், அவர் நடித்த முதல் படம் இது. ஓர் அறிமுக நடிகரைத் திரையில் பார்க்கிறோம் எனும் எண்ணமே ஏற்படவில்லை.

கதாநாயகியின் தந்தை, தாய் மற்றும் மாற்றுத்திறனாளியான தங்கை ஆகிய பாத்திரங்களில் நடித்தவர்களைச் சொல்லியே ஆக வேண்டும். வேறு சில பாத்திரங்களில் நடித்தவர்களைப் போல் இல்லாமல், மிக இயற்கையாக நேர்த்தியாக நடித்து படத்துக்கு வலிமை சேர்க்கிறார்கள்.

பெற்ற பெண்ணுக்கு உணவில் நஞ்சு வைத்துக் கொடுக்கும் போது, அந்தக் குடும்பம் படும் வலியும், வேதனையும், ஆற்றாமையும், வெளிக் காட்ட முடியாத கோபமும், அழுகையும் படம் பார்த்து சில சில நாட்கள் ஆன பின்னும், நெஞ்சுக்குள்ளேயே நிற்கின்றன.

முந்திரிக் காட்டுக்குள் கேமரா நுழைந்து நுழைந்து வெகு அற்புதமாக படம் பிடித்திருக்கிறது. காதலிக்கும் போது கூட இசையில் மென்மை வெளிப்படவில்லை. அது பால் ஈர்ப்பின் காரணமாக வந்த காதல் அல்ல. இயல்பான நட்பை, அடித்தும், மான பங்கம் செய்தும், அச்சுறுத்தியும், அவமானப்படுத்துகிற சூழ்நிலை கண்டு பொங்கி 'போங்கடா நாங்களும் காதலிக்கிறோம்' என்ற முடிவுக்கு அவர்கள் வருவதை சொல்லாமல் சொல்கிறதோ அந்த இசை.

மனிதர்களாக இவர்கள்! சாதிய வன்மம் சுமக்கும் மிருகங்களை விட கொடூரமான வன்முறையாளர்கள் என்பதால் படம் முழுக்க சத்தமாக இருக்கிறது. காவல்துறை அதிகாரியாக சீமான் வருகிறார். தமது அண்ணனைத் திரையில் பார்க்க, தம்பிகள் வந்து படம் ஓடுவதற்கு வழிவகை செய்யுமானால் மகிழ்ச்சி அடையலாம்.

எல்லோரும் காவல்துறை சீருடை அணிந்திருக்கும் போது, அவர் மட்டும் சாதாரண உடுப்பில் வந்து அந்த வன்ம கும்பலிடம் அறிவுரை பேசுவது செயற்கையாகத் தெரிகிறது.

சாதியாகப் பிரிந்து நிற்காதே என்று அவர் அறிவுரைக்கும்போது, "சாதி எங்கள் அடையாளம், எங்கள் பெயரோடு சேர்த்து போட்டுக் கொள்வோம்" என அவர்கள் பதில் அளிக்கிறார்கள். அவர் கோபப்படுகிறார். படம் எடுத்து கொஞ்ச நாள் ஆனது அப்போதுதான் தெரிகிறது. படத்தில் வில்லன்கள் சொல்வதை இப்போது அவரே சொல்கிறாரே!

**சாதிய ஆணவ படுகொலை பற்றி முழுக்கப் பேசி, 'மனிதனாக இரு' என்று முகத்தில் அறைந்து சொல்கிறது படம். இப்போது ஆணவக் கொலை அல்ல, அது குடிப் பெருமை கொலை என சீமான் புது நாமம் சூட்டி இருக்கிறார் அல்லவா! படத்தைப் பொறுத்தவரை அவர் நடிகர்தானே! இதை எப்படி படத்தோடு இணைக்கலாம் என்று சிலர் கேட்கக்கூடும். அவர் வரும் காட்சிகள் எல்லாம், காவல்துறை அலுவலராக இருந்தும், அவர் மேடையில் பேசுவதையே அங்கும் பேசுவதால், இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை.**

'சாதியே உனக்கொரு சாவு வராதா' என்ற பாடல் நெஞ்சை அதிரசெய்கிறது. படத்தில் கேட்டதைத் தவிர வேறு நேரங்களில் அந்த பாடல்களை கேட்டு உணர வாய்ப்பில்லாததால், மற்ற பாடல்கள் நெஞ்சில் பதியவில்லை. சினிமா வணிகத்தைப் பற்றி கவலையேபடாமல், கதை படமாக்கப்பட்டு இருக்கிறது. இதற்காக படக்குழுவினர் அனைவருக்கும் பாராட்டு தெரிவிக்க வேண்டும்.

சாதியக் கொடுமைகள், குடிப்பெருமை மட்டுமல்ல, பெரும்பான்மையோரின் மனதுக்குள் எழுதப்பட்டுள்ள மனு சாஸ்திரத்தை பறித்து வெளியில் வீச வேண்டிய பணியில், இந்தப் படமும் ஒரு பங்களிப்பை செய்திருக்கிறது.

– டி.எம்.மூர்த்தி

16ம் பக்க தொடர்ச்சி

தொழிலாளர்களுக்கும், ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் பெரும் நன்மை ஏற்படும் என்று மசோதா கூறுகிறது.

இந்தத் திருத்தத்தின்படி, இதுவரை இருந்த 8 மணி நேர வேலை, இனிமேல் ஓய்வு இடைவெளிகளை உள்ளடக்கிய கூடுதல் நேரம் மற்றும் நீட்டிக்கப்பட்ட நேரம் என மாற்றப்படும்.

இதன் பொருள் என்னவென்றால் காலையில் ஒரு மூன்று மணி நேரம், பிறகு இடைவெளி, மதியம் ஒரு மூன்று மணி நேரம், பிறகு இடைவெளி, இரவில் ஒரு இரண்டு மணி நேரம் என்று பிரித்து வேலை கொடுக்கலாம். எட்டு மணி நேரம் என்பது மாறாது. ஆனால் தொழிற்சாலைக்குள் 12 மணி நேரம் வரை தொழிலாளி இருந்தாக வேண்டும்.

தொழிலாளர்களுக்கு இது அதிக நன்மையை ஏற்படுத்தும் என்று முதலாளிகளும், முதலாளிகளின் சங்கங்களும் கூறியதாக மசோதாவே சொல்கிறது. இது சரிதானா என தொழிலாளர்களிடம், தொழிற்சங்கங்களிடம் அரசு ஒரு போதும் இதுபற்றிப் பேசவில்லை.

தொழிலாளர்களுக்கு நன்மை பெற்றுத் தருவதற்காகத்தான், முதலாளிகளின் சங்கம் தன்னிடம் பேசும் என்று இந்த அரசு நம்பும் என்பது ஏற்கத்தக்கதாக இல்லை.

இந்த மசோதாவை சட்டப்பேரவையில் விவாதிக்க விட்டிருந்தால், மாற்றுக்கருத்தை சொல்லவாவது வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால் தொழிலாளர் அமைச்சர் இதை முன்வைத்த உடனேயே குரல் வாக்கெடுப்பில் சில வினாடிகளில் இது நிறைவேற்றப்பட்டு விட்டது. சட்ட மசோதாக்களை விவாதிக்க விடாமல் அவசர கதிப்போக்கில் நிறைவேற்றுவது ஜனநாயக அரசியல் அமைப்பின் உள்ளடக்கத்திற்கு எதிரானதாகும். 150 ஆண்டுகால உரிமைகளை பறிக்கும் தொழிலாளர் சட்டத் தொகுப்பை 40 வினாடிகளில் மோடி அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது தான் இப்போது நினைவுக்கு வருகிறது.

ஒன்றிய அரசு தொழிலாளர்களுக்கு விரோதமாக கொண்டு வந்துள்ள சட்டத் தொகுப்புகளில், தொழில், பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் பணி நிலைமைகள் சட்டத்தொகுப்பும் ஒன்றாகும். இதனை ஒன்றிய ஆளுங்கட்சியின் பி.எம்.எஸ்., தமிழ்நாடு ஆளும்கட்சியின் எல்.பி.எப். ஆகிய சங்கங்கள் உட்பட அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்க்கின்றன. தொழிலாளர்களின் தொடர் போராட்டத்தால் அவற்றை இன்னும் செயல்படுத்த முடியாமல் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது.

அது தாமதமாவதால், அந்தச் சட்டங்களில் சொல்லப்பட்டு இருப்பவற்றை இப்போதே தமிழ்நாட்டில் அமுலாக்குவதற்காகவே இந்தச் சட்ட திருத்தம் என ஐயத்துக்கிடமில்லாமல் மசோதா தெளிவுபடுத்துகிறது. மோடியின் வழியில் அவரை விட முந்திக்கொண்டு செல்ல முயற்சிப்பது தமிழ்நாடு அரசுக்கு அழகல்ல.

தமிழக அரசு தொழிலாளர் விஷயத்தில் தொடர்ந்து முதலாளிகள், கார்ப்பரேட்டுகள் சொற்படி நடந்து தொழிலாளர் உரிமைகளை பறிப்பதற்கு வழிவகை செய்து தருகிறது. பல்வேறு துறைகளில் தொழிலாளர்கள் கொதித்துப் போய் இருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்கு சென்று சேர்ந்திருக்க வேண்டும். அதை அரசு அலட்சியம் செய்யக்கூடாது.

எட்டு மணி நேர வேலைக்காக நடத்தப்பட்ட போராட்டங்களின் நினைவாக மேதினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில், சென்னை கடற்கரையில்தான் சிந்தனை சிற்பி சிங்காரவேலர் முதல் முறையாக மேதினத்தை 1923ல் கொண்டாடினார். அதன் நூற்றாண்டு நிறைவு இந்த மேதினம். அதே கடற்கரையில் அமைந்திருக்கும் சட்டப்பேரவையில் 8 மணி நேர வேலையை அதிகரிக்கும் மசோதா, அவரை போற்றுபவர்களாலேயே நிறைவேற்றப்படுவது பாதைமாறுகிறது என்பதன் அடையாளமாகவே உணர்த்தப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசின் தொழிற்சாலைகள் சட்டத்திருத்த மசோதாவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி 2023 ஏப்ரல் 21 ஆம் தேதியன்று தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களிலும், தொழில் மையங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்துவது என்று கூட்டம் முடிவு செய்தது. இதன்படி தமிழக மெங்கும் ஏப்ரல் 21ல் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஒன்றிய பாஜக மோடி அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத நடவடிக்கைகளைக் கண்டித்தும், தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளைக் கைவிட வேண்டும், குறைந்தபட்ச ஊதியமாக மாதம் ரூ21,000/ நிர்ணயிக்க வேண்டும், குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ரூ.6000/நிர்ணயிக்க வேண்டும், பொதுத்துறை நிறுவனங்களை தனியாரிமயப்படுத்துவதைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தியும் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் நடைபெறும் மாவட்ட, மாநில மாநாடுகள், துறைவாரியான கூட்டங்கள், பிரச்சார இயக்கங்கள், ஆகஸ்ட் 9ல் சென்னை பெருந்திரளான அமர்வு உள்ளிட்ட அனைத்துச் சங்க இயக்கங்களில் ஏஐடியுசி சார்பில் முழுமையாகப் பங்கெடுத்து வெற்றி பெறச் செய்வதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

**ஏப்ரல் 21 ஆர்ப்பாட்ட செய்திகள் அடுத்த இதழில் வெளிவரும்.**

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 21.04.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## எட்டு மணி நேர வேலை பறிப்பு: தமிழ்நாடு அரசின் மே தினப் பரிசு!

# ஏப்ரல் 21ல் தமிழ்நாடு முழுவதும் ஏஐடியுசி கண்டன ஆர்ப்பாட்டம்






தமிழ்நாடு ஏஐடியுசி நிர்வாகக்குழு, மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் 2023 ஏப்ரல் 17 அன்று ஈரோட்டில் எம்.கல்யாண சுந்தரம் இல்லத்தில் மாநிலத் தலைவர் எஸ்.காசி விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியுசி தேசியத் துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி., ஏஐடியுசி தேசிய செயலாளர்கள் டி.எம்.மூர்த்தி, வஹிதா நிஜாம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

ஏஐடியுசி மாநில பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் வேலையறிக்கை சமர்பித்தார். ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 12.4.2023 அன்று தொழிற்சாலைகள் சட்டத்தைத் திருத்தி மசோதா ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் சட்டம் ஒரு மத்திய சட்டமாகும். அதன் "51, 52, 54, 55, 56 அல்லது 58 ஆம் பிரிவுகளின் வகை முறைகள் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் அனைத்திலிருந்தும் அல்லது எவற்றிலிருந்தும் தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகளின் குழு அல்லது வகை அல்லது விவரிப்பு முழுவதற்கும் அறிக்கையில் குறிப்பிடப்படலாகும். அத்தகைய காலத்திற்கு அல்லது காலங்களுக்கு விலக்களிக்கலாம்" என்பதுதான் அந்த திருத்தமாகும்.

அதாவது மேற்சொன்ன பிரிவுகளில் சொல்லப்பட்டுள்ள எதனையும் முதலாளிகள் கடைபிடிக்க வேண்டியது இல்லை என்று மாநில அரசு விலக்கி வைக்கிறது.

எந்தெந்த தொழில்கள், எவ்வளவு காலத்திற்கு விலக்கு என்பதெல்லாம் இனி அதிகாரிகளின் உத்தரவாக வரும். அந்த விதிகளின் கீழ் இனிமேல் தொழிலாளர்கள் தமது உரிமையைக் கோர முடியாது.

இதனால் தொழிலாளர்களுக்கும், பெண்

தொடர்ச்சி 15ம் பக்கம்

## திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் ஜனசக்தி ஆயுள் சந்தா வழங்கியவர்கள்

வி.ஆர்.முருகேசன்
பி.மன்மதன் வட்டார ஊராட்சி உறுப்பினர்,
எஸ்.ஞானசுந்தரம்
என்.வெற்றிவேல்
டி.மகேந்திரன்
டி.முத்தமிழ்செல்வன்
ஆர்.ராஜேந்திரன்
ஜி.பழனி ஊராட்சி மன்றத் தலைவர்
பி.காந்தி ந.து.செ. சிபிஐ
பி.அன்பழகன், அஞ்சல் (ஓய்வு)
பி.ராமச்சந்திரன் இந்தியன் வங்கி (ஓய்வு)
கே.அசோகன் போர்மென், டி.என்.இ.பி.
எம்.பாரதிமோகன் எல்.ஐ.சி.
சி.பாஸ்கர், இந்தியன் வங்கி மேலாளர் (ஓய்வு)
ஆர்.புகழேந்தி காவல்துறை ஆய்வாளர் (ஓய்வு),
மோகன்தாஸ் மெயில் ஓவர்சீர் போஸ்டல்
தங்கமணி கந்தசாமி, பால்வளத்துறை

ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.உலகநாதன், திருத்துறைப்பூண்டி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் ஆகியோரிடம் ஜனசக்தி ஆயுள் சந்தா வழங்கினர்.


















Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: K.Subbarayan .,
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.